பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 | வள்ளுவர் ஆண்டு 2050 | கார்த்திகை 19 வியாழக்கிழமை 05.12.2019 | கதிர் 30




ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எதிர்பார்திருப்பவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் சுமார் 45 வருட கால அரசியலின் முடிவு நாளாக இன்றையதினம் அமையக்கூடும்.

பக்கம் 02 »

# கோட்டா பதவியேற்ற பின்னர் வடக்கில் இராணுவ கெடுபிடி!

## ரெலோ குற்றச்சாட்டு




யாழ்ப்பாணம், டிசெ. 05

ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற பின்னர் வடக்கு – கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளதாக கூறியுள்ள வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் ரெலோ முக்கியஸ்தருமான க. விந்தன், மக்கள் மீண்டும் போராடும் நிலை உருவாக்கப்பட்டிருப்பதாகவும் குறிபிட்டார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பக்கம் 03 »

## கனேடியத் தூதர் நேற்று மஹிந்தவுடன் சந்திப்பு



கொழும்பு, டிசெ. 05

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினன் நேற்று அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினார்.

பக்கம் 03 »

## மட்டக்களப்பில் கொட்டும் மழை வெள்ளத்தில் தாழ்நிலப் பகுதிகள்



மட்டக்களப்பு, டிசெ. 05

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரவலாகப் பெய்துவரும் அடை மழை காரணமாக மாவட்டத்தின் தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும்

பக்கம் 03 »

## வடமத்திய ஆளுநராக திஸ்ஸ கிழக்கு ஆளுநராக அனுராதா

### வடக்குக்கு இன்னும் முடிவில்லை





கொழும்பு, டிசெ. 05

இரண்டு மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்தனர்.

பக்கம் 03 »

## தமிழர் ஒருவரைத் தாருங்கள் வடக்கு ஆளுநர் ஆக்குகிறேன்

### அமைச்சரவையில் கோட்டா வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 05

வடக்கு மாகாண ஆளுநராக தமிழர் ஒருவரை நியமிக்க நான் தயாராக இருக்கிறேன். அமைச்சர்களே சிறந்த ஒருவரை என்னிடம் பரிந்துரை செய்யுங்கள் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அவர் இந்தக் கருத்தை வெளி

பக்கம் 03 »

## மாகாணத் தேர்தல் பழைய முறையில்!

### கட்சித் தலைவர்கள் இணக்கம்

கொழும்பு, டிசெ. 05

மாகாண சபைத் தேர்தலைப் பழைய தேர்தல் முறையில் நடத்துவதற்கு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

பக்கம் 03 »

## மணல், கிரவலை ஏற்றிச் செல்லும் அனுமதிப்பத்திர நடைமுறை ரத்து



கொழும்பு, டிசெ. 5

மணல், கிரவல் உள்ளிட்ட கனிம வளங்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளும்நடைமுறையை உடன் நடைமுறைக்கு வரும்

பக்கம் 03 »

## இலங்கை ஊடகவியலாளர்களுக்கு கோட்டா வந்த பின் அச்சுறுத்தல்கள்

### எல்லைகளற்ற செய்தியாளர் அமைப்பு சுட்டிக்காட்டு




கொழும்பு, டிசெ.05

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் தேடுதல்கள், விசாரணைகள், அச்சுறுத்தல்

பக்கம் 03 »

# கோட்டாவைக் கொல்லச் சதி?

## ஓட்டமாவடியைச் சேர்ந்தவரை தடுப்புக்காவலில் வைக்க உத்தரவு

கொழும்பு, டிசெ. 05

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர் ஒருவரையோ கொலை செய்யத் திட்டமிடப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 72 மணித்தியாலம் தடுத்து வைத்து விசாரிக்க மினுவாங்

பக்கம் 03 »

## கிணற்றினுள் வீழ்ந்து 5 வயது சிறுவன் சாவு!

### வட்டுக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 05

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் தவறுதலாக கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளான்.

வட்டுக்கோட்டை அராலி கிழக்கில்

பக்கம் 03 »

# இடமாற்றம் நிராகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் பேச்சு

யாழ்ப்பாணம், டிசெ. 5

வடக்கு மாகாணத்தில் பின்தங்கிய பிரதேசங்களில் 6 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கக் கோரி பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து வலியுறுத்தினர்.



யாழ்ப்பாணம் கல்வி வலய வளாகத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாணக் கல்வித் திணைக் களத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

வடக்கு மாகாணத் கல்வித் திணைக்களத்தால் அண்மையில் வெளியிடப்பட்ட ஆசிரிய இடமாற்றப் பட்டியலில் இடமாற்றக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட ஆசிரியர்களே இவ்வாறு மாகாண கல்விப் பணிப்பாளரைச் சந்தித்து தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட ஆசிரியர்கள்,

பின்தங்கிய பிரதேசங்களில் 6 ஆண்டுகளுக்கு மேலாக சேவைக்காலத்தை நிறைவு செய்த தன் பின்னர், எமது சொந்த இடங்களுக்கு வருவதற்காக இடமாற்றத்துக்கு விண்ணப்பித்தோம்.

இடமாற்றம் நிராகரிக்கப்பட்ட விவரக் கோவையில், ஆளணி பற்றாக்குறை இல்லை எனக் காரணம் காட்டி, இடமாற்றத்தை நிராகரித்துள்ளனர்.

அதனடிப்படையில் 40 ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மாகாண கல்விப் பணிப்பாளரைச் சந்தித்தோம். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியை நிறைவு செய்தால், பின்னர் அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

அவ்வாறு பார்த்தால், நாங்கள் 7 ஆண்டுகளைத் தாண்டியும் கடமையாற்றவேண்டியதாக இருக்கும். எனவே, வெளிமாவட்டத்தில் கடமையாற்றாத ஆசிரியர்கள் ஏராளமானவர்கள் யாழ்.மாவட்டத்தில் உள்ளார்கள். அவர்களை அந்த இடத்துக்கு இடமாற்றத்தை வழங்கிக் கொண்டு, எமக்கான இடமாற்றத்தைத் தரவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தோம்.

இவ்வாறு பின்தங்கிய பிரதேசமான, மடு, துணுக்காய், மன்னார் உள்ளிட்ட பல்வேறு வலயங்களைச் சார்ந்த 200 ற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எமக்கான இடமாற்றத்தைவழங்கவேண்டும்வேண்டுகோள் விடுக்கின்றோம் – என்றனர். (ஐ)

# சுயேச்சையாக களமிறங்குவேன்

## ரஞ்சன் ராமநாயக்க அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 05



அடுத்த பொதுத் தேர்தலில் எனக்கு வேட்புமனு வழங்கப்பட மாட்டாது என ஐ.தே.க சொல்லியுள்ளது. அவர்கள் வேட்புமனு வழங்காமல் விடுமளவுக்கு நான் என்ன செய்தேன்?. எனக்கு வேட்புமனு வழங்காவிட்டால் சுயேச்சையாக போட்டியிடுவேன். வெற்றியடைய முடியவில்லையென்றால் சினிமாவுக்கே திரும்பி சென்று விடுவேன் எனத் தெரிவித்துள்ளார் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கட்சி எனக்கு வேட்பு மனுக்களை வழங்காது என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நான் என்ன தவறு செய்தேன்? எனது பணியாளர்களில் எனது உறவினர்கள் இல்லை. நான் பிணைமுறி மோசடியில் ஈடுபடவில்லை. நான் அலோசியஸை அழைக்கவில்லை. அந்தப் பணத்தை ஒரு அடித்தளமாக வைத்து மக்களுக்கு உதவுங்கள்.

நான் செய்த தவறு, சில துறவிகளை அவமதித்தேன். எல்லா மரியாதைக்குரிய மகா சங்கங்களுக்கும் நான் இதைச் சொல்லவில்லை. கசப்பான உண்மை – பேச்சாளராக நான் சொன்னது உண்மைதான்.

நான் வேட்பாளராக நியமிக்கப்படவில்லையென்றால், கட்சி மாற மாட்டேன். நான் சுயேச்சையாகப் போட்டியிடுவேன். கம்பஹா அல்லது கொழும்பு அல்லது எங்காவது சம்பந்தப்பட்ட வாக்குகளை மக்கள் கொடுத்தால், நான் நாடாளுமன்றத்திற்கு செல்வேன். அல்லது வீட்டுக்குச் சென்று சினிமாவில் நடிக்க தொடங்கவேண்டும் – என்றார். (ஐ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு

## மஹிந்தவிடம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 005

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் பெற்றுத் தருவதாக வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றித் தருமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரப்பட்டுள்ளது.



இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் மத்திய மாகாணக் கல்வி அமைச்சருமான சுப்பையா சதாசிவம் பிரதமரைச் சந்தித்து இதுகுறித்த மகஜரை கையளித்தார்.

இந்தச் சந்திப்பு, பிரதமரின் அமைச்சு செயலகத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்றதுடன், இந்திய வம்சாளி மக்கள் சார்பில் பிரதமருக்கு வாழ்த்தும் தெரிவிக்கப்பட்டது.

நடந்து முடிந்த தேர்தலின்போது மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஆயிரம் ரூபா சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை ஏற்றுக்கொண்ட பிரதமர், உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சம்பள உயர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி வழங்கினார் எனச் சதாசிவம் தெரிவித்துள்ளார்.

# இனி...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

அவர் இலங்கை அரசியலில் தப்பிப் பிழைப்பாரா, நின்று, நிலைத்து, நீடிப்பாரா அல்லது சந்திரிகா குமாரதுங்க போல் முன்னாள் தலைவராக பின்புலத்தில் நின்று அரசியல் செய்யும் நிலைக்குத் தள்ளப்படுவாரா என்பவை எல்லாம் பெரும்பாலும் இன்று முடிவாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் முக்கிய கூட்டம் இன்று நடைபெறுகின்றது. ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் தலைவிதி குறித்து அங்குதான் பெரும்பாலும் முடிவு கட்டப்படும என நம்பப்படுகின்றது.

நான் இந்தப் பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக் காட்டியபடி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினராயின், அவரே கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் என்கின்றது கட்சியின் யாப்பு விதி.

அதாவது கட்சியின் தலைவர் எம்.பியாக இருக்குமிடத்து அவரது கட்சிக்கு நாடாளுமன்றத்தில் பிரதமர் பதவி அல்லது எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படுமானால் அதைப் பெறவேண்டியவர் அவர்தான்.

அதாவது, ஐ.தே.கட்சியின் யாப்புப்படி பார்த்தால் இப்போது அக்கட்சித் தரப்புக்கு நாடாளுமன்றத்தில் வழங்கப்படும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி அக்கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கே உரியது.

ஆனால் கடந்த இருப்பத்தியைந்து வருடங்களாகக் கட்சியின் தலைவராகவிருந்து பெரும்பாலும் கட்சியைத் தோல்விப் பாதைக்கே அழைத்துச்சென்றவர் ரணில் விக்கிரமசிங்கவே என்று தெரிவித்து, அதன் காரணமாக அந்தப் பதவி அவருக்கு வழங்கப்படுகின்றமையை பெரும்பாலான கட்சி எம்.பிக்கள் எதிர்க்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அதனால் இன்றைய கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி ரணிலுக்கு இல்லை என்று பெரும்பாலும் முடிவாகும் எனத் தெரிகின்றது.

அந்தப் பதவியில் இருந்து அவர் கிளப்பப்பட்டால், கட்சியின் தலைவர் பதவியும் அவரிடமிருந்து பறிபோகும் வாய்புகளே அதிகம் உள்ளன என்கின்றன கட்சி வட்டாரங்கள்.

இதை ரணில் விக்கிரமசிங்க நன்கு விளங்கிக் கொண்டுவிட்டார் – புரிந்து கொண்டுவிட்டார் – எனவும் தெரிகின்றது.

அதனால் அரசியலில் தமது ஓய்வு காலத்துக்கான முன் ஆயத்தங்களை அவர் தொடங்கியிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

19 ஆவது அரசமைப்புத்திருத்தத்தின் கீழ் ஒரு முன்னாள் பிரதமருக்கு வழங்கப்படக் கூடிய வசதிகள், உதவிகள், ஒத்தாசைகள் குறித்து அவர் சிந்திக்கத் தலைப்பட்டிருக்கின்றார்.

அவற்றை சுட்டிக்காட்டி அதனடிப்படையில் தமக்குரிய ஒழுங்குகளைச் செய்யுமாறு தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார் எனவும் அறியவந்தது.

அதாவது தமது அரசியல் வாழ்வின் முடிவில் தமக்குரிய ஓய்வு வசதிகளைக் கோருகின்ற பாங்கில் அமைந்த கடிதம் அது.

கட்சியின் தலைவர் பதவியைப் பொறுத்தவரை பதினைந்து வருடங்களுக்கு மேலாக பிரச்சினைகள் வந்தபோதெல்லாம் 'விடாக் கண்டன், கொடாக் கண்டன்' போல அதனைப் பிடித்துவைத்துக்கொண்டிருந்தவர். மலைபோல வந்த நெருக்கடிகள் எல்லாவற்றையும் சிலைபோல நின்று சமாளித்தவர்.

ஆயினும் இப்போது அவருக்குக் காலம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன்.

இவ்வளவு காலமும் கட்சிக்கு உழைத்தவரை கட்சியே வேண்டாம் எனும்போது அவர் தொடர்ந்து அதில் தலைமைப் பதவியைப் பற்றிப் பிடித்துக்கொண்டிருப்பது அர்த்தமில்லை.

நிழலின் அருமை வெயிலில் தானே தெரியும். ரணில் விலகிய பின்னர்தான் அவரின் அருமை ஐ.தே.க.வுக்குத தெரியவரும்

அதற்கு இடமளித்து ரணில் விலகித் தள்ளி நிற்பதுதான் இப்போதைய நிலையில் பொருத்தமானதும் சரியானதும் என நான் நினைக்கிறேன். நீங்கள என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே....?

- மின்னல் -

# பல்கலைக்கழக ஆசிரியர்கள் எவருமே சட்டத்தரணியாகப் பணியாற்றமுடியாது

## மானியங்கள் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, டிசெ. 05

பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் போதனைசார் பணியாள் தொகுதியினர் எவரும் சட்டத்தரணிகளாகச் செயற்பட முடியாது என்றும், போதனைசார் பணியாளர்கள் தமது வழக்கமான பணி களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், அவ்வப் பல்கலைக்கழ கங்களின் –கல்வி நிறுவனங்களின் ஆளும் அதிகார சபை (பேரவை) அனுமதியுடன் பிரசித்த நொத்தாரிசுக்களாகப் பணியாற்ற முடியும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முடிவு செய்திருக்கிறது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தின் அவதானங்களுக்கு அமைவாக 21.11.2013 அன்று நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 885 ஆவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து 05.09.2019 இல் நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1017 ஆவது கூட்டத்தில் இந்தத் தீர்மானம் உறுதி செய்யப்பட்டிருப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10 /2019 ஆம் இலக்க தாபனச் சுற்றறிக்கையின் மூலம் சகல பல்கலைக்கழ கங்களின் துணைவேந்தர்களுக்கும் இந்த அறிவிப்பை அவர் தெரியப்படுத்தியுள்ளார்.

## கோட்டா பதவி...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையின் முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஜனாதிபதியாகவும் முன்னாள் இராணுவத் தளபதி ஒருவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இதன் விளைவு இராணுவத்துக்குச் சகல அதிகாரங்களும் வழங்கப்பட்டிருக்கின்றன.

இப்போது போர்க்காலத்தைப் போன்று இராணுவம் வீதிகளில் நின்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. மறுபக்கம் புங்குடுதீவில் 14 ஏக்கர், கொழும்புத்துறையில் 300 ஏக்கர் என காணிகள் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

வலிகாமம் வடக்கில் 2 ஏக்கர் காணியில் இராணுவம் விகாரை கட்டுகிறது. நீராவிப்பிட்டிப் பிள்ளையார் ஆலயத்தில் 3 அடி புத்தர் சிலை வைக்கப்படுகின்றது. இவ்வாறு மீண்டும் வடக்கு – கிழக்கு பகுதிகளில் இராணுவ ஆக்கிரமிப்பு தொடங்கியிருக்கின்றது.

ஆனால் தெற்கிலோ, இலங்கையின் பிற பாகங்களிலோ இராணுவத்தின் இவ்வாறான நடவடிக்கைகளைக் காண முடியவில்லை. ஒரு நாட்டின் இராணுவம் என்பது அந்த நாட்டில் வாழும் சகல இனங்களுக்கும், சகல மதங்களுக்கும் பொதுவானது.

அனைவருக்கும் பாதுகாப்பாக இருக்கவேண்டுமே தவிர ஓர் இனத்தை அடக்க நினைப்பதும், ஒரு மதத்தை மட்டும் தூக்கி கொண்டு திரிவதும், இராணுவ அடக்குமுறை அல்லாமல் வேறு ஒன்றாக இருக்க வாய்ப்பில்லை.

மஹிந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதைபோல் மீண்டும் மக்கள் தங்கள் வாழும் உரிமைக்காகவும் நிலங்களுக்காகவும் வீதியில் இறங்கிப் போராடும் நிலைமையை உருவாக்கிவிட்டிருக்கின்றது இந்த ஆட்சி. அதேபோல் போர்க் காலத்தை நினைவுபடுத்துவதாக வீதிகளில் இப்போது இராணுவச் சோதனைகளையும் காணக்கூடியதாக உள்ளது.

இந்த நிலை மாற்றப்படவேண்டும். இல்லையேல் கடந்த காலத்தைபோல் சாத்வீகப் போராட்டங்களுக்கு எமது மக்கள் தயாராக வேண்டும் – என்றார். (ஐ-07)

## தமிழர்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

யிட்டார்.

வடக்கு மாகாண ஆளுநரை நியமிப்பதில் இழுபறி நிலை நீடிக்கிறது. தமது வெற்றிக்கு ஒத்துழைத்தவர்களை ஏனைய 8 மாகாணங்களுக்கும் ஆளுநர்களாக நியமித்த ஜனாதிபதி, வடக்கு மாகாண ஆளுநராகத் தமிழ் ஒருவரை நியமிப்பதில் சிக்கலை எதிர்கொள்கிறார்.

முத்தையா முரளிதரனை நியமிப்பதில் ஜனாதிபதி உறுதியாக விருந்தார். எனினும் முரளிதரன் ஆளுநர் பதவியை அடியோடு மறுத்துவிட்டார். அதனால் தனது வெற்றிக்கு பங்காற்றிய கலாநிதி ரிஷி செந்தில்ராஜை நியமிக்கத் திட்டமிட்டார். அவரும் பொதுத் தேர்தலை இலக்குவைத்து மறுத்துவிட்டார்.

இந்த நிலையில் வடக்கு ஆளுநராகப் பலரது பெயர்கள் அடிபட்டன. மூத்த ஊடகவியலாளர் ஒருவரின் பெயரும் பரிந்துரையில் உள்ளது. அத்துடன், கலாநிதி சுரேன் ராகவனை நியமிக்க ஜனாதிபதியுடன் ஒரு தரப்பு போராடிக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் அமைச்சரவையில் நேற்று இந்தக் கருத்தை ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

## மணல்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

வகையில் ரத்துச் செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

இதன்மூலம் நேற்று முதல் யாரும் மணல், கிரவல் உள்ளிட்ட கனிய வளங்களை ஏற்றிச்செல்ல முடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மணல் உள்ளிட்ட கனிம வளங்களை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் எடுக்கவேண்டும் என்ற நடைமுறை தற்போது உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடமத்திய...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

கிழக்கு மாகாண ஆளுநராக தொழிலதிபரும் சமூக செயற்பாட்டாளருமான அநுராதா யஹம்பத் நியமிக்கப்பட்டுள்ளார். வட மத்திய மாகாண ஆளுநராக திஸ்ஸ விதாரண நியமிக்கப்பட்டார்.

இவர்கள் இருவரும் ஜனாதிபதி முன்னிலையில் நேற்று மாலை பதவியேற்றனர்.

ஆயினும் வடக்கு மாகாணத்துக்கு இதுவரை ஆளுநர் நியமிக்கப்படவில்லை. வடக்கு மாகாண ஆளுநர் பதவிக்கு மூத்த தமிழ் ஊடகவியலாளர் ஒருவரின் பெயரைப் பிரதமர் அலுவலகம் பரிந்துரைத்துள்ளபோதும் ஜனாதிபதி செயலகத்திடம் இருந்து இது வரை பதில் கிடைக்கவில்லை எனக் கூறப்படுகின்றது. (ஐ)

## கோட்டாவைக்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

கொடை நீதிமன்ற நீதிவான் கேசர சீ.ஏ. சமரதிவாகர அனுமதியளித்தார்.

சந்தேகநபர் மினுவாங்கொடை நீதிமன்றில் கட்டுநாயக்க பொலிஸாரால் நேற்று முற்படுத்தப்பட்டார்.

ஓட்டமாவடி, நீராவோடை, ஆலிம்பாதை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சந்தேகநபரையே தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க பொலிஸார் மன்றில் விண்ணப்பம் செய்தனர். சந்தேகநபரை மூன்று தினங்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்று அனுமதியளித்தது.

சந்தேகநபர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அல்லது அவரது குடும்ப உறுப்பினரைக் கொலை செய்வதற்காகத் திட்டமொன்றை தீட்டியிருந்தார் எனத் தகவல்கள் கிடைத்தன.

சந்தேகநபர், மேலும் 3 பேருடன் கட்டுநாயக்க அமந்தொலுவ, ஜயவர்தனபுர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வாடகைக்கு வசித்து வந்த நிலையில் கைது செய்யப்பட்டார்.

ஏனைய மூவரும் ஏதேனும் குற்றம் ஒன்றை இழைக்கத் தயாரில்லை என்ற விடயம் உறுதியானதை அடுத்து, அவர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர் என்று பொலிஸார் மன்றில் கூறினர்.

இதன் காரணமாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், சந்தேகநபரைத் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ள அனுமதியளிக்கவேண்டும் என்று கூறிய பொலிஸார், பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக்காவல் அனுமதியையும் நீதிமன்றில் முன்வைத்தனர்.

இதற்கமைய, விடயங்களை ஆராய்ந்த நீதவான், அதற்கு அனுமதி வழங்கியமையுடன், விசாரணை நிறைவடைந்தவுடன் சந்தேகநபரை எதிர்வரும் சனிக்கிழமை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்தரவிட்டார். (ஐ)

# மன்னாரில் மண் அகழ்வை நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

மன்னார், டிசெ. 05

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, தோட்டவெளிப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மண் அகழ்வை நிறுத்தக் கோரி அப்பகுதி பெண்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

காடு சார்ந்த நிலப் பிரதேசத்தைக் கொண்ட அந்தக் கிராமத்தில் சுமார் 100இற்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் அந்தப் பகுதியில் மீன் வளர்ப்புத் திட்டத்தை செயற்படுத்துவதாகக் கூறி ஒரு தரப்பினர் பல மாதங்களாக மண் அகழ்வில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த மண் அகழ்வுக்கான அனுமதி அநுராதபுரத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அந்தப் பகுதி பெண்கள் இணைந்து நேற்று காலை மண் அகழும் இடத்திற்குச் சென்று அகழ்வை தடுத்து நிறுத்தினர்.

அத்துடன், அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரங்கள் மற்றும் ஜே.சி.பி. உள்ளிட்ட வாகனங்களுடன் பணியாட்கள் அவ்விடத்தில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் அவ்விடத்தில் மண் அகழ்வுக்கான உரிமை கோரி தென்பகுதியைச் சேர்ந்த ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதையடுத்து, அந்தப்பகுதிக்கு பங்குத்தந்தை அருட்தந்தை பெனோ அலெக்சான்டர் சில்வா, மன்னார் பிரதேசசபை உறுப்பினர் ஏ.ரி.லுஸ்ரின் ஆகியோர் சென்று மக்களுடன் கலந்துரையாடிய பின்னர் போராட்டம் கைவிடப்பட்டது.

## மாகாணத்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

அரசியல் கட்சித் தலைவர்கள், தேர்தல் கண்காணிப்பு அமைப்பு மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்வரும் வருடம் ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதியளவில் நடத்த வாய்ப்புள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்படுமாயின், அந்தத் தினத்தில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தக்கூடிய வாய்ப்பு காணப்படுவதாக இந்தக் கலந்துரையாடலின்போது தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கூறினார்.

அதேபோல், எல்லைநிர்ணய நடவடிக்கைகள் இதுவரையும் முறையான நிலையில் இல்லாமையால், மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்த அனைவரும் உடன்பட்டுள்ளனர் – என்றார். (ஐ)

## கனேடியத்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

தற்போதைய அரசியல் நிலைவரம், இரு நாட்டு பொருளாதார உறவுகள் மற்றும் பல்வேறு விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டன எனப் பிரதமர் அலுவலகம் தெரிவித்தது. (ஐ)

## கிணற்றினுள்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

நேற்று முன்தினம் மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குகதீசன் நிருஜன் (வயது–5) என்ற சிறுவனே உயிரிழந்தான் என்று வட்டுக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்பு விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ–07)

## மட்டக்களப்பில்...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகப் பொது மக்கள் சிலர் இடம்பெயர்ந்துள்ளமையோடு, பெரும் அசௌகரியங்களையும் எதிர்நோக்கியுள்ளனர்.

போரதீவுப்பற்றுப் பிரதேசத்தில் அமைந்துள்ள பெரிய போரதீவு பெரியகுளம், கோவில் போரதீவுக்குளம், வெல்லாவெளிக் குளம், பொறுகாமம் குளம், பழுகாமம் குளம், வட்டிக்குளம் மற்றும் தும்பங்கேணிக்குளம் உள்ளிட்ட சிறிய குளங்கள் அனைத்தும் நிரம்பி வழிகின்றன.

போரதீவுப்பற்றுப் பிரதேசத்தின் பட்டாபுரம், பெரியபோரதீவு, பழுகாமம், வேத்துச்சேனை போன்ற பல தாழ் நிலப் பகுதிகளிலும் உள்ளூர் வீதிகளிலும் வெள்ளநீர் தேங்கி நிற்பதனால் அப்பகுதிகளிலுள்ள பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

போரதீவுப்பற்றுப் பிரதேசம் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது வடகீழ்பருவப்பெயர்ச்சிமழையை நம்பிமேற்கொள்ளப்படும் பெரும்போக வேளாண்மைச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளமையோடு, சோளம், நிலக்கடலை, கௌபி, பயறு உள்ளிட்ட மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர். தற்போது பெய்து வரும் அடை மழையினால் வேளாண்மைச் செய்கை உள்ளிட்ட அனைத்துப் பயிரினங்களும் வெள்ளத்தில் அள்ளுண்டு போய் பாதிக்கப்பட்டுள்ளன என அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் தேங்கி நிற்கும் வெள்ள நீரையும் ஓட வைக்கும் பணியில் போரதீவுப்பற்றுப் பிரதேச செயலகம் ஈடுபட்டு வருகின்றது.

தொடர்ந்து மழை பெய்து வருவதோடு, நேற்றுக் காலையிலிருந்து மழையுடன் பலத்த காற்றும் வீசுவதால், மக்கள் வெளிப் பிரதேசங்களுக்குச் செல்வதிலும், தமது அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை, வெல்லாவெளி – மண்டூர் பிரதான வீதி, விவேகானந்தபுரம் – காக்காச்சுவட்டை வீதிகளை ஊடறுத்து வெள்ளநீர் பாய்வதால் அவ்வீதியைப் பயன்படுத்துவோர் பலத்த சிரமத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

மழை வெள்ளத்தையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பெரிய குளங்களான உன்னிச்சை, நவகிரி, உறுகாமம், கட்டுமுறிவு, வெலிக்காக்கண்டி ஆகிய குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டு மேலதிக நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது. (ஐ)

## இலங்கை...

*(முதலாம் பக்கத் தொடர்ச்சி)*

களை தாங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்ற இலங்கை பத்திரிகையாளர்களின் கரிசனைகளைத் தாம் பகிர்ந்து கொள்வதாக எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அதிகாரிகள் அனைத்து வகையான அச்சுறுத்தல்களையும் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பின் ஆசிய பசுபிக்கிற்கான தலைவர் டானியல் பாஸ்டார்ட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

'டேர்மினேட்டர்' என அழைக்கப்படும் ராஜபக்ஷ இலங்கை ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வார காலத்துக்குள் இலங்கையின் பத்திரிகைச் சுதந்திரத்தின் மீது அதன் தாக்கம் தெரிய ஆரம்பித்துவிட்டது.

ஆரம்ப இலக்குகளாக நியூஸ் ஹப் எனப்படும் செய்தி இணையத்தளம் காணப்பட்டது. அதன் அலுவலகத்தை நவம்பர் 26 ஆம் திகதி சோதனையிட்ட பொலிஸார் சேவர், கணினிகள், மடிக்கணினிகள் ஆகியவற்றின் உள்ளடக்கங்களை ஆராய்ந்தனர்.

நியூஸ் ஹப்பின் அலுவலகத்தைச் சோதனையிடுவதற்காகத் தாங்கள் அனுமதி பெற்றுள்ளனர் எனத் தெரிவித்து பொலிஸார் காண்பித்த ஆவணத்தில் 12 டிசெம்பர் 2018 என்ற திகதி காணப்பட்டது. அந்த ஆவணம் ஒரு வருடத்துக்கு முன்னர் காலாவதியாகிவிட்டது .

எனினும் இந்தக் குற்றச்சாட்டை அலட்சியம் செய்த பொலிஸார், இணையத்தளத்தின் அனைத்துக் கணினிகளிலும் கோட்டா என் வார்த்தை உள்ளதா எனச் சோதனை செய்தனர். கோட்டாபய என ஏதாவது குறிப்பு காணப்படுகின்றதா எனக் கண்டுபிடிப்பதற்காக அவ்வாறு செய்தனர்.

சுயாதீன செய்தி ஊடகத்தின் மீதான பொலிஸாரின் முழுமையான சோதனையும், குற்றவியல் நடைமுறைகள் மோசமாக மீறப்பட்டமையும் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் ஊடக சுதந்திரம் குறித்து கவலை தரும் சமிக்ஞைகளை வெளியிட்டுள்ளன.

பத்திரிகையாளர்களை அச்சுறுத்தாமல் அவர்களின் பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்குமாறு அரசு பொலிஸாருக்கு அறிவுறுத்தல்களை விடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தமிழ் நாளிதழான தினப்புயலின் ஆசிரியர் சக்திவேல் பிரகாஷ் வவுனியாவில் சீருடைய அணியாத பொலிஸாரினால் பல மணி நேரம் விசாரிக்கப்பட்டார். விடுதலைப் புலிகள் குறித்து வெளியான கட்டுரைகள், படங்கள் குறித்து அவரிடம் பல மணிநேரம் விசாரணை செய்த பின்னர் அவரின் செய்தியாளர்கள் அனைவரினதும் விவரங்களைக் கோரினார்கள். அவர் அதனை வழங்க மறுத்துவிட்டார்.

லீடர் என்ற செய்தி இணையத் தளத்தின் யூரியூப்புக்கு பொறுப்பாகவுள்ள சஞ்சய் தனுஸ்க என்பவர் 26 ஆம் திகதி சி.ஐ.டியினரால் விசாரணை செய்யப்பட்டார்.

வொய்ஸ் ரியூப் என்ற செய்தி இணையத்தளத்தின் ஆசிரியர் துசார விதாரன 28 ஆம் திகதி சி.ஐ.டியினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டார். கடந்த காலத்தில் லீடர் என்ற இணையத்தளத்தில் பணியாற்றியவேளை தனது நடவடிக்கைகள் குறித்து இரண்டு மணிநேரம் விசாரணை செய்யப்பட்டார் என அவர் எமக்குத் தெரி

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## பேரினவாதத்தின் பரவணிப் பண்பியல்பு

எப்போதுமே பௌத்த, சிங்கள பேரினவாத மேலாண்மைச் சிந்தனையில் ஊறித் திளைத்திருக்கும் தென்னிலங்கை, எல்லாவற்றையும் இனவாதக் கண்கொண்டு பார்க்கும் தனது பாரம்பரிய – பரவணி – பண்பியல்பிலிருந்து தன்னை மாற்றிக் கொள்ளப் பேவதே இல்லைப் போலும்.

உள்நாட்டு அரசியலைத்தான் இப்படி பேரினவாதப் பூதக் கண்ணாடி போட்டபடி அது அணுகுகின்றது என்று பார்த்தால், சர்வதேச அரசியலும் கூட அதற்கு விதிவிலக்கல்ல என்றே தெரிகின்றது.

இலங்கைத் தமிழர்கள் நீதி, நியாயமான – வரலாற்று உரித்துடைய – பாரம்பரிய ரீதியான உரிமையான தங்களது வேணவாக்களை – அபிலாஷைகளை – எதிர்பார்ப்புகளை – முன்வைத்தால் உடனேயே அது பிரிவினை என்று கத்தத் தொடங்கி விடும் தென்னிலங்கை.

தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் தெளிவான பார்வையோ, தீர்க்க தரிசனமான சிந்தனையோ, உருப்படியான நிகழ்ச்சித் திட்டமோ இல்லாத தென்னிலங்கை, தமிழர் தரப்பின் கோரிக்கை யாது?அதன் அடிப்படைகள் என்ன?அதில் உள்ள நியாயப்பாடுகள் யாவை? – என்பன குறித்தெல்லாம் கவனம் எடுக்கச் சிரத்தை கொள்வதில்லை.

மாறாக, இந்த இலங்கைத் தீவு சிங்கள, பௌத்தர்களுக்கு மட்டுமே உரியது, விருப்பமானால் ஏனைய மதத்தவர்களும் மொழியினரும், இனத்தவர்களும் இந்தத் தீவில் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்ந்து விட்டுப் போகட்டும், இந்தத் தீவில் தனிப் பிராந்திய உரிமை எதுவும் கேட்கக் கூடாது என்பதே தென்னிலங்கையின் ஒரே நிலைப்பாடாக இருக்கின்றது.

இதற்கு மாறாக, இந்தத் தீவின் சிறுபான்மையினருக்காக யார் குரல் எழுப்பினாலும் – அவர்கள் இந்த நாட்டவர்களாக இருந்தாலும் சரி, வெளிநாட்டவர்களாக இருந்தாலும் சரி – தெற்கின் இனவாதக் கண்ணாடியூடான கணிப்பீடு அதுதான்.

இப்போது பிரிட்டனில் பொதுத்தேர்தல் பிரசாரம் சூடு பிடித்திருக்கின்றது.

சரித்திர காலம் தொட்டு இந்த இலங்கைத் தீவில் தனித்துவமான மொழி, வேறுபாடான பண்பியல்புகள், வழக்காறுகள், பழக்கவழக்கங்கள், வரலாறுகளுடன் வெவ்வேறு இனங்களின் தேசங்களாக இருந்த தமிழர் தேசத்தையும், சிங்களவர் தேசத்தையும் கைப்பற்றித் தனித் தனியாக ஆண்ட பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தினர், 1830 களின் முற்பகுதியில் – பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் – தங்களின் நிர்வாக வசதிக்காக இரண்டையும் ஓர் ஆளுநரின் கீழ் கொண்டுவந்தனர். தாம் தனித்தனியாகக் கைப்பற்றிய தமிழர் தேசத்தின் இறைமையையும் சிங்களவர் தேசத்தின் இறைமையையும் ஒன்று சேர்த்து இரண்டு தேசங்களையுமே அடிமையாக்கி ஆண்டனர்.

1948இல் இந்தத் தீர்வுக்கு சுதந்திரம் கொடுத்துவிட்டு நடையைக் கட்டிய பிரிட்டிஷ்காரர், தாங்கள் போகும்போது, அதுவரை தாம் அடிமைப்படுத்தியிருந்த சிங்களவர்களின் இறைமையை சிங்களவர்களிடமே ஒப்புவித்த அதே சமயம், அந்த இறைமையுடன் அதுவரை தாம் அடிமைப்படுத்தியிருந்த தமிழர் தேசத்தின் இறைமையையும் சேர்த்து அப்படியே சிங்களவர்களிடம் ஒப்படைத்துச் சென்றனர்.

பதினாறாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்ட தமிழர் தேசத்தின் இறைமை, இந்தத் தீவின் சிங்கள தேசத்திடம் கைம்மாறி அடிமைப்பட்ட வரலாறு இதுதான்.

இந்த வரலாறு காரணமாகத்தான் இலங்கை தமிழரின் விடுதலைக்கான வேள்வியில் பிரிட்டிஷாரின் பொறுப்பு – கடப்பாடு – குறித்து அதிகம் பேசப்படுகின்றது.

தமிழரின் இறைமையைக் கைப்பற்றி, அடிமையாக்கி, அந்த அடிமைத் தளையை சிங்களவர்களிடம் கையளித்துச் சென்ற தொடர் பாவத்துக்காக அந்தத் தேசத்தின் அரசியல் வாதிகள் இன்றும் இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களின் நியாயக் குரலை வழமை போல – தன் பரவணிப் பண்புகளுக்கு அமைய – இனவாதக் கண்ணோட்டத்தில் பார்த்துக் கூக்குரலிடுகின்றது தென்னிலங்கை.

பிரிட்டிஷ் தேர்தலை ஒட்டி ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சி முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை இரண்டு அரசுகளாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இது இலங்கையின் இறையாண்மைக்கு விடுக்கப்படும் பாரிய அச்சுறுத்தல் எனவும் இலங்கையின் ஆளும் கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான உதய கம்மன்பில எம்.பி. கூக்குரலிடுகின்றமை இந்த வகையைச் சேர்ந்ததுதான்.

ஆனால், அப்படி இலங்கை இரண்டு தேசங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் எனக் கொன்சர் வேட்டிவ் கட்சியின் விஞ்ஞாபனத்தில் எங்கும் முன்மொழியப்படவேயில்லை என அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் சுட்டிக்காட்டுகின்றார்.

காமாலைக் கண்ணுக்கு எல்லாம் மஞ்சளாகவே தெரியும் என்பார்கள்.

இலங்கையின் எல்லா விடயங்களையும் இனவாதப் போக்கில் – குறிப்பாகப் பேரினவாத மேலாண்மைச் சிந்தனையில் – அணுகுகின்ற தென்னிலங்கையின் இனவாத அரசியல்வாதிகளுக்கு கொன்சர்வேட்டிவ் கட்சியின் சாதாரண தேர்தல் விஞ்ஞாபனம் பிரிவினைவாத முன்னறிவிப்பாகப் பட்டதில் வியப்பேதுமில்லை. அது பேரினவாதத்தின் பரவணிப் பண்பியல்பின் விளைவு.

# மகேந்திரனை கைது செய்ய கோட்டாவின் அரசு முயற்சி

கொழும்பு, டிசெ. 05

அர்ஜுன மகேந்திரனை ஒப்படைக்குமாறு சிங்கப்பூர் அரசிடம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான இடைக்கால அரசு தொடர்ந்தும் கோரிக்கை விடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கி மோசடி தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவின் அறிக்கைகளை அரசு மதிப்பாய்வு செய்யும் என்றும் அதன் பின்னர் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த ஆண்டு செப்ரெம்பரில் அர்ஜுன மகேந்திரனை ஒப்படைப்பதற்கான 21,000 பக்க ஆவணத்தில் கையெழுத்திட்டார், இது சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகம் ஊடாக சிங்கப்பூர் அரசிடம் ஒப்படைக்க அனுப்பப்பட்டது.



இந்த ஆவணங்கள் ஒக்ரோபர் மாத ஆரம்பத்தில் சிங்கப்பூர் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் வழங்கப்பட்டதை அடுத்து, இலங்கையின் கோரிக்கையைப் பரிசீலிப்பதாக அந்தத் திணைக்களம் அறிவித்தது.

இந்நிலையில் புதிய அரசு அர்ஜுன மகேந்திரனை ஒப்படைக்கும் நடவடிக்கையைச் சிங்கப்பூர் அரசுடன் தொடர்ந்து மேற்கொள்ளும் என ரமேஷ் பத்திரன கூறினார். (ஐ)

## மத்திய வங்கி பிணைமுறி மோசடி:

# தடயவியல் கணக்கறிக்கையை ரகசியமாக வைக்கத் தீர்மானம்



கொழும்பு, டிசெ. 05

முறிகள் மோசடி தொடர்பான தடயவியல் கணக்கறிக்கையை இரகசியமாக வைக்கத் தீர்மானித்துள்ளதாக கோப் குழுவின் முன்னாள் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்னெத்தி தெரிவித்துள்ளார்.

சுனில் ஹந்துன்னெத்தியினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய கோப் குழு நியமிக்கப்படும் வரை இவ்வாறு தடயவியல் கணக்கறிக்கையை இரகசியமாக வைக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், தடயவியல் கணக்கறிக்கை தொடர்பிலான 5 அறிக்கைகள் மத்திய வங்கியிடமிருந்து கிடைத்துள்ளன எனவும் அவர் கூறினார்.

இந்தக் கணக்கறிக்கைகளை கோப் குழுவின் உறுப்பினர்கள் மாத்திரமே கையாள முடியும் எனவும், சட்ட நடவடிக்கைகளுக்காக மாத்திரமே அதனைப் பயன்படுத்த முடியும் எனவும் சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளமையால், அவற்றை இரகசியமாகப் பேணத் தீர்மானித்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு முதல் 2015 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மத்திய வங்கியின் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்ற முறைமை தொடர்பாகத் தடயவியல் கணக்கறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்கள் சில தொடர்ந்தும் செயற்படவுள்ளன

கொழும்பு, டிசெ. 05

நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்கள் சில தொடர்ந்தும்செயற்படும்எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தொடர்பாடற் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான இலங்கையின் இன மற்றும் மத ஒற்றுமையை உறுதி செய்வதை ஆராய்ந்து அதன் விதப்புரைகளை நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கானதுமான, நாடாளுமன்றத் தெரிவுக் குழு தொடந்தும் இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிச் சபாநாயகர் தலைமையில் இயங்கும், தேசிய மதிப்பீட்டு ஆற்றல்களை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வுகளை மேற்கொண்டு அதன் விதப்புரைகளை நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கானதுமான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும் தொடர்ந்தும் செயற்படும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு, வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு, பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு, வலுசக்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு ஆகியன தொடர்ந்தும் செயற்படவுள்ளன.

மேலும், சுகாதாரம் மற்றும் மனித சேமநலம் தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழு, உள்ளக நிர்வாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துரைசார் மேற்பார்வைக்குழு, சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு உள்ளிட்ட சில நாடாளுமன்றக் குழுக்களும் தொடர்ந்தும் இயங்கவுள்ளன. (ஐ)

யாழ். சமூக செயற்பாட்டு மையம்
JSAC
பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பாரினில் பெண்கள் பாங்குடன் உயர்ச்சி பெற
பாதுகாப்பான சூழல்தனை குடும்பத்திலிருந்தே
அமைத்திடுவோம்.
16
2019

நாளை
06.12.2019
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: தசமி முழுவதும் வரை
திதி : உத்தரட்டாதி மு.இ. 11.41 வரை
இராகுகாலம் : 10.47 – 12.17
சுப நேரம் : 06.17 – 07.47

# ‘சன் சீ’ கப்பல் உடைப்பு



ஒட்டாவா, டிசெ. 05

492 தமிழ் அகதிகளுடன் கனடாவை அடைந்து, உலகத்தின் கவ னத்தை ஈர்த்த சன் சீ கப்பல் தற்பொது உடைக் கப்பட்டுள்ளதாக கனேடியன் மரி ரைம் எஞ்சினியரிங் நிறுவனம் அறிவித்துள் ளது.

2010ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12ஆம் திகதி எம்.வி. சன் சீ என்ற கப்பல் கனடாவின் வன்கூவர் மானிலத்தின் பிரிட்டிஸ் கொலம்பிய கடற்பிராந்தியத்தில் வந்து நின்ற காட்சி உலகத்தின் ஊடகங் கள் அனைத்தையும் அதிர வைத்திருந் தது.

இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் இருந்து உயிர்தப்பிய 492 அகதிகள் அந்தக் கப்பலில் இருந்தார் கள். 380 ஆண்கள், 63 பெண்கள், 49 சிறுவர் மற்றும் குழந்தைகள் அந்தக் கப்பவில் மூன்று மாதங்கள் கடலில் பயணம் செய்து கனடாவை வந்தடைந்தி ருந்தார்கள்.

இவர்கள் தாய்லாந்தில் கப்பலேறி மிகவும் கடுமையான, ஆபத்தான கடற் பயணத்தை மேற்கொண்ட செய்தி உலகை உலுக்கியிருந்தது. அந்த அகதிகளைக் கனடா அரசு கையாண்ட விதமும் பெரும் வாதப் பிரதிவாதங்களுக்கு உள்ளாகியி ருந்தது.

அந்தக் கப்பலில் பயணம் செய்த பெரும்பாலானவர்கள் இரண்டு வருடங்க ளாகத் தடுத்துவைக்கப்பட்டு, 2012ஆம் ஆண்டு மே மாதமளவில் விடுவிக்கப்பட் டார்கள். பயணிகளில் நான்கு பேர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், 19 பயணிகள் இலங்கைக்கு நாடு கடத்தப் பட்டார்கள்.

அவ்வாறு நாடுகடத்தப்பட்வர்களில் சத்தியபவான் ஆசீர்வாதம் என்பவர் படைகளால்கைதுசெய்யப்பட்டுச்சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட் டார் என மனித உரிமை அமைப்புக்களின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு உலகத்தின் பார்வையை தனது பக்கம் திருப்பியிருந்த மிகவும் பிரபல்யமான சன் சீ கப்பல் தற்போது உடைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது. (ஐ)

# வெள்ளத்தில் மூழ்கிய வீதிகள்!

திருமலை, டிசெ. 05

கடும் மழை காரணமாக திருகோணமலை – தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாத்திமா பாலிகாவித்தியாலய வீதி உள்ளிட்ட பகுதி வெள்ளத்தில் மூழ்கியது.

நேற்று முன் தினம் மாலை பெய்த கடும் அடை மழை காரணமாக இவ்வாறான நிலைமை ஏற்பட்டது. இதனால் போக்குவரத்து தடைப்பட்டது. (ஐ)



# சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தப்பட்டமை பொய்

## ஜனாதிபதி கோட்டா கூறுகிறார்



கொழும்பு, டிசெ. 05

சுவிஸ் தூதரகத்தின் பெண் ஊழியர் கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் உண்மையல்ல என்பது இதுவரை இடம்பெற்ற விசாரணைகளின் அடிப்படையில் தெரிய வந்துள்ளது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு –

சி.சி.ரி.வி. காணொளிப் பதிவுகளைக் கொண்டு நடத் தப்பட்ட ஆய்வில் சம்பவ தினத்தன்று குறிப்பிட்ட பெண் ஊழியர் அலுவலகம் அருகில் வாடகை வாகனம் ஒன்றில் புறப்பட்டுச் சென்று, பம்பலப்பிட்டியில் நேரத்தைக் கழித்த பின்னர் மாளிகாகந்தைப் பகுதியில் உள்ள தனது வீட்டுக்கு வாடகை கார் மூலம் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

வாடகைக் கார் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அப்ஸ் மூலம் அது மேலும் உறுதி செய் யப்பட்டுள்ளது. சில விவரங்கள் தொழில்நுட்ப ரீதியாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளன. இதன் பின்னணியில் யாராவது இருந்து செயற்பட்டார்களா? அல்லது தனிப்பட்ட பிரச்சினையா? என்பதை ஊழியரிடம் வாக்குமூலம் பெற்ற பின்னர் உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

சட்டமும் நீதியும் தனது கடமையைச் செய்யும். நாட் டுக்கு ஏற்பட்ட அவப் பெயரை நீக்கி உண்மையை வெளிக்கொணர எமது அரசு தயங்காது – என்றார்.

# கஞ்சாவுடன் மூன்று பேர் திருமலையில் சிக்கினர்

திருமலை, டிசெ. 05

திருகோணமலை நிலாவெளி - ஆத்தி மேடு பிரதேசத்தில் 6ஆம் கட்டை பகுதி யில் நேற்று முன் தினம் 18000 மில்லி கிராம் கேரளா கஞ்சாவுடன் பெண் ஒரு வர் உட்பட மூவரைக் கைது செய்தனர் என திருகோணமலை மாவட்ட பிராந் திய போதைப்பொருள் ஒழிப்புப் பிரி வினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீண்ட காலமாக கஞ்சா விற்பனை செய்து வருகின்றனர் என்றும் அந்தப் பெண்ணும் ஓர் ஆணும் இரண்டாவது முறையாக கஞ்சா விற்பனை செய்யும் போது பிடிபட்டுள்ளனர் என அவர்கள் தெரிவித்தனர்.

திருகோணமலை லவ் லேன், தக்வா நகரைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவரி டமிருந்து 6000 மில்லிகிராம் கேரளக் கஞ்சாவும், ஜாமாலியா பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய நபரிடமிருந்து 5000 மில்லி கிராம் கேரளக் கஞ்சாவும், ஆத்திமேடு பிரதேசம் 6ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தாயிடமிருந்து 7000 மில்லிகிராம் கேரளக் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டன என போதைப்பொ ருள் ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்க ளையும் கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ் சாவையும் நிலாவெளி பொலிஸார் வசம் ஒப்படைத்தனர் என அவர்கள் கூறினர்.

# வாகனப் புகைப் பரிசோதனை கட்டணம் ஜனவரியில் குறைப்பு

கொழும்பு, டிசெ. 05

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடை முறைக்கு வரும் வகையில் வாகனங்களின் காபன் பரிசோதனைக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

காபன் பரிசோதனை கட்டணம் குறைப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலையும் நிதியமைச்சு வெளி யிட்டுள்ளது.

வற் வரி குறைக்கப்பட்டுள்ளமை காரணமாகவே இவ்வாறு மோட்டார் வாகன காபன் பரிசோதனைக்கான கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளன என நிதி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

# இலங்கையருக்கு விஸா வழங்குவதை இடைநிறுத்தியுள்ளதா சுவிஸ் தூதரம்?

கொழும்பு, டிசெ. 05

இலங்கையர்கள்சுவிற் ஸர்லாந்து செல்வதற்கு விஸா வழங்கும் நடவ டிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சிங்கள ராவய தேசிய அமைப்பின் பொதுச் செய லாளர் மாலகந்தே சுதத்த தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தில் பணி யாற்றிய பெண் அதிகாரி ஒருவர் அண்மையில் கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாக அவர் குறிப்பிட்டார்.

எனக்கு சுவிஸ் செல் வதற்கான அழைப்பு ஒன்று கிடைத்தது. அதற்கான ஆவணங்களை சுவிஸ் விஸா நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கூறப் பட்டது. அதற்கமைய நான் ஆவணங்களைச் சமர்ப் பிக்கச் சென்றேன். அங்கு இலங்கையர்களுக்கான விஸா வழங்கும் நடவ டிக்கை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ள தாக அதிகாரிகள் என்னிடம் கூறினார்கள் என தேரர் மேலும் தெரிவித்தார்.

# ரஞ்ஜித் சொய்சா எம்.பி. காலமானார்



கொழும்பு, டிசெ. 05

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குரு நாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சொய்சா தனது 57ஆவது வயதில் காலமானார்.

சிங்கப்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்றுக் காலமானார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் குருநாகல் மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினராக ரஞ்ஜித் சொய்சா தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அந்தமான் தீவுக் கடல் பகுதியில் அத்துமீறி நுழைந்தது சீனக் கப்பல்

## விரட்டியடிப்பு என்கிறது இந்தியா



இந்தியக் கடற்பகுதியில் அத்துமீறி நுழைந்த சீனக் கப்பல் விரட்டியடிக்கப்பட்டதாக இந்தியக் கடற்படைத் தளபதி கரம்பீர் சிங் தெரிவித்துள்ளார்.

கடற்படைத்தினத்தை முன்னிட்டு செய்தியாளர்களைச் சந்தித்த அவர், அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளின் போர்ட் பிளேர் அருகே, சீனாவின் 'ஷி யான் 1' என்ற சீன ஆராய்ச்சி கப்பல், ஆராய்ச்சி பணியில் ஈடுபட்டு கொண்டிருந்ததாகக் குறிப்பிட்டார்.

இதனை, அந்தப் பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த, இந்தியக் கடலோர பாதுகாப்பு கண்காணிப்பு விமானம் கண்டுபிடித்ததாகக் கூறிய அவர், இந்தியக் கடற்படை சார்பில் கடும் எச்சரிக்கை கொடுக்கப்பட்டதால் சீனக் கப்பல் அங்கிருந்து சென்றதாகக் கூறினார்.

அந்தமான் கடல் பகுதியில் இந்தியாவின் பிரத்தியேக பொருளாதார மண்டலம் செயல்படுவதால் அப்பகுதியில் வெளிநாட்டுக் கப்பல்களுக்கு அனுமதியில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இனி, குழந்தைகளின் ஆபாச படங்களை பார்ப்பவர்கள் கைது செய்யப்படுவார்கள்

## தமிழகக் காவல்துறை அதிரடி அறிவிப்பு

சென்னை,டிசெ.05

குழந்தைகளின் ஆபாச படங்களை இணையதளங்களில் பார்ப்பவர், பதிவேற்றுபவர்களும், பதிவிறக்கம் செய்தவர்களும் இனி போக்சோ சட்டத்தில் கைது செய்யப்படுவார்கள் என தமிழக காவல் துறை எச்சரித்துள்ளது.

அமெரிக்க உளவு துறை இந்திய உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பிய சமீபத்திய தகவலில் குழந்தைகளின் ஆபாச படங்களை பார்க்கும் இளைஞர்கள் இந்தியாவில் தான் அதிகம் என்றும், அதுவும் தமிழகத்தில் இந்த எண்ணிக்கை அதிகம் என்றும் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

அதற்கான பட்டியலும் தமிழக காவல் துறையிடம் கொடுக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்துகிறார் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்பு பிரிவின் கூடுதல் பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி.

குழந்தைகளை ஆபாசமாக சித்திரித்து பதிவேற்றப்பட்ட இணையதளங்களை பயன்படுத்தி வரும் ஆயிரக்கணக்கானவர்களின் பட்டியலைத்தான் மத்திய உள்துறை தமிழகக் காவல் துறைக்கு வழங்கியுள்ளது. குழந்தைகளின் ஆபாச படங்களை பதிவிறக்கம் செய்து வைத்திருப்பவர்களும் கூட அந்தப் பட்டியலில் உள்ளனர்.

அவர்கள் அனைவரையும் கைது செய்யும் நடவடிக்கை தொடங்கவிருப்பதாக அதிர வைக்கிறார் கூடுதல் டிஜிபி ரவி. அவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் மீது தகவல் தொழில் நுட்பத்தை தவறாக கையாளுதல் மற்றும் போக்சோ சட்டப்பிரிவுகளில் வழக்கு பதிந்து 3 ஆண்டுகளில் இருந்து அதிகபட்சமாக 7 ஆண்டுகள் சிறை தண்டனை




வழங்கப்படும் என எச்சரிக்கிறது காவல் துறை.

சமீபத்தில் ஹைதராபாத்தில் பெண் மருத்துவர் கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. கைதான குற்றவாளிகளும் இளம் வயதினர்தான். இதற்கெல்லாம் மிக முக்கிய காரணம் பாலியல் குறித்த வக்கிர எண்ணங்களுடன் இளம் வயதினர் வளர்வதுதான் என உளவியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒழுக்கத்துடன், ஆரோக்கியமான இளம் சமூகம் உருவாக்கினால்தான் குழந்தைகள், பெண்களுக்கு எதிராக நடக்கும் கொடும் குற்றங்களைத் தவிர்க்க முடியும் என்கின்றனர் காவல் துறையினர்.

## உலகின் பெரிய கிரிக்கெட் மைதானம் குஜராத்தில் விரைவில் திறந்து வைப்பு



உலகின் மிகப்பெரிய கிரிக்கெட் மைதானத்தின் பிரம்மாண்ட திறப்பு விழாவுடன், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் பயன்பாட்டிற்கு கொண்டு வர இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ) திட்டமிட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரில் மறுகட்டமைப்பு செய்யப்பட்டு வரும் சர்தார் படேல் மைதானம், ஒரே நேரத்தில் ஒரு லட்சத்து பத்தாயிரம் பேர் அமரும் வகையில் தயார் செய்யப்பட்டு வருகிறது.

வேகமாக நடந்து வரும் இதன் பணிகள் அடுத்த ஆண்டு தொடக்கத்திலேயே முடிவடைய வாய்ப்பு இருப்பதாகவும், சர்வதேசக் கிரிக்கெட் அமைப்பின் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் ஆசிய அணி மற்றும் சர்வதேச அணிகளுக்கு இடையேயான காட்சிப் போட்டியை முதல் போட்டியாக நடத்த பி.சி.சி.ஐ. திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ப. சிதம்பரத்துக்கு பிணை அனுமதி



ஐ.என்.எக்ஸ். மீடியா வழக்கில் முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்திற்கு கைது செய்யப்பட்டு 106 நாள்களுக்கு பிறகு நேற்றுப் பிணை வழங்கியது உச்சநீதிமன்றம்.

சி.பி.ஐ. தொடர்ந்த வழக்கில் ஏற்கனவே பிணை கிடைத்த நிலையில் தற்போது அமுலாக்கத்துறை வழக்கிலும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

டெல்லி திகார் சிறையில் உள்ள ப.சிதம்பரத்தை அனுமதி இல்லாமல் இந்தியாவை விட்டு வெளியேறக்கூடாது என்கிற நிபந்தனையுடன் ரூ.2 லட்சம் பெறுமதிக்கு இரண்டு பேரின் ஆள் உறுதியுடன் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

# நாஸாவுக்கு முன்பே லாண்டரை இஸ்ரோ கண்டுபிடித்து விட்டது!

## தெரிவிக்கிறார் அதன் தலைவர் சிவன்



புதுடில்லி,டிசெ.05

நிலவில் விழுந்து நொறுங்கிய இந்தியாவின் விக்ரம் லாண்டரை இஸ்ரோ முன்பே கண்டுபிடித்து விட்டதாக இந்திய விண்வெளி மையமான இஸ்ரோவின் தலைவர் சிவன் தெரிவித்துள்ளார்.

'சந்தரியான் – 2' விண்கலம் மூலம் நிலவின் தென் பகுதியை ஆய்வு செய்வதற்காக இஸ்ரோ அனுப்பிய லாண்டர், நிலவில் தரையிறங்குவதற்கு 2.1 கிலோ மீற்றர் தொலைவில், நிலவில் மோதி நொறுங்கியது.

இதனையடுத்து லாண்டரைக் கண்டுபிடிக்க இஸ்ரோ பல முயற்சிகளை மேற்கொண்டது. இஸ்ரோவிற்கு உதவியாக அமெரிக்காவின் நாஸாவும் விக்ரம் லாண்டரை கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்கியது.

இந்நிலையில் விக்ரம் லாண்டரின் உடைந்த பாகங்கள் அடங்கிய புகைப்படத்தை நாஸா நேற்று முன்தினம் வெளியிட்டது. இதற்கு மதுரையைச் சேர்ந்த சண்முக சுப்ரமணியன் என்பவர் நாஸாவுக்கு உதவினார் என நாஸா தனது இணையத் தளத்தில் செய்தி வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று இது தொடர்பாக இஸ்ரோ தலைவர் சிவன் அளித்த பேட்டியில், இஸ்ரோவின் ஒர்பிட்டர் நிலவை சுற்றியபடியே விக்ரம் லேண்டரை ஏற்கனவே கண்டுபிடித்து விட்டது. இது பற்றி இஸ்ரோ இணையதளத்தில் ஏற்கனவே தகவல் வெளியிடப்பட்டுள்ளது. வேண்டுமானால் நீங்கள் சென்று பார்த்துக் கொள்ளலாம் – எனத் தெரிவித்துள்ளார்.

செப்ரெம்பர் 10 ஆம் திகதி இஸ்ரோ தனது டுவிட்டர் பக்கத்தில் விக்ரம் லாண்டரை கண்டுபிடித்து விட்டதாகத் தகவல் வெளியிட்டுள்ளது. இதனால் இஸ்ரோவின் இந்தத் தகவலை சரி பார்க்காமல், தாங்கள் லேண்டரை புதிதாகக் கண்டுபிடித்துள்ளதாக நாஸா எவ்வாறு தகவல் வெளியிட்டது என்ற கேள்வி எழுந்துள்ளது.

# அமெரிக்க அதிபர் தேர்தல் போட்டியிலிருந்து இந்திய வம்சாவளி கமலா ஹாரீஸ் விலகல்



அமெரிக்க அதிபர் பதவி தேர்தலுக்கான போட்டியில் இருந்து தாம் விலகுகிறார் என இந்திய வம்சாவளி செனட் சபை உறுப்பினரான கமலா ஹாரீஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபர் பதவிக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள நிலையில், ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட கமலா ஹாரீஸும் களத்தில் இருந்தார்.

இந்நிலையில், சமூகவலைதளம் ஒன்றில் தமது ஆதரவாளர்களுக்கு கமலா ஹாரீஸ் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், போட்டியிலிருந்து விலகுகிறார் எனவும், பிரசாரத்தை நிறுத்திக் கொள்கிறார் எனவும் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் பிரசாரத்துக்கான நிதியை திரட்ட முடியாதமை, பிரசாரத்தில் பின்தங்கியமை ஆகியவையே கமலா ஹாரீஸின் இந்த முடிவுக்குக் காரணமாகக் கூறப்படுகிறது.





# பிலிப்பைன்ஸை உலுக்கியது 'கம்முரி' புயல்!

மணிலா,டிசெ.05

பிலிப்பைன்ஸ்நாட்டை'கம்முரி' புயல் கடுமையாக உலுக்கியது. இதில் சுமார் 5 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் தென் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள லூசோன் தீவை நேற்று சக்தி வாய்ந்த புயல் தாக்கியது. இந்த புயலுக்கு 'கம்முரி' என பெயரிடப்பட்டு உள்ளது.

மணிக்கு 241 கிலோ மீற்றர் வேகத்தில் சூறாவளி காற்று வீசியது. இதன் காரண மாக கடற்கரை நகரங்களிலும், மலைப் பாங்கான பகுதிகளிலும் இடைவிடாது கன மழை கொட்டி தீர்த்தது.

அத்துடன் லூசோன் தீவுக்கு உட்பட்ட அல்பே, சூர் மற்றும் சோர்சோகான் உள்ளிட்ட 6 மாகாணங்களில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது.

பலத்த காற்று வீசியதில் வீடுகள் மற் றும் கடைகளின் மேற்கூரைகள் தூக்கி வீசப்பட்டன. நூற்றுக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. சாலையோரம் இருந்த மின்கம்பங்கள் சரிந்து விழுந்தமையால் மின்சாரம் துண்டிக்கப்பட்டு ஆயிரக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கி உள்ளன.

கனமழையைத் தொடர்ந்து நீர்நிலை களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு ஊர்க ளுக்குள் தண்ணீர் புகுந்து கரைபுரண் டோடுகிறது. சாலைகளில் வெள்ளம் ஆறாக ஓடுவதால் வாகனப் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டு உள்ளது.

அத்துடன் புயல் மற்றும் கனமழை காரணமாக தலைநகர் மணிலாவில் உள்ள விமான நிலையம் 12 மணி நேரத்துக்கு மூடப்பட்டது. இதனால் ஐந்நூறுக்கும் அதிகமான விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

புயல் தாக்கிய பகுதிகளில் கடல் கொந் தளிப்புடன் காணப்படுவதால் கப்பல் போக்குவரத்தை நிறுத்த பிலிப்பீன்ஸ் கடலோர காவல்படை உத்தரவிட்டு உள்ளது.

அல்பே மாகாணத்தின் தலைநகர் லொகஸ்பியில் தகரத்திலான மேற்கூரை யுடன் கூடிய வீட்டின் மீது உயர் அழுத்த மின்கம்பி அறுந்து விழுந்ததில் வீட்டில் இருந்த ஒருவரின் உடலில் மின்சாரம் பாய்ந்து சம்பவ இடத்திலேயே பலியானார்.

'கம்முரி' புயல் காரணமாக சுமார் 5 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதுவரை 43 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு உள்ளனர்.

புயல் மற்றும் கனமழை மேலும் தொட ரலாம் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்திருப்பதால் மேற்கூறிய 6 மாகாணங்களில் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையில் கம்முரி புயல் காரண மாக பிலிப்பைன்சில் நடந்து வரும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் விளையாட்டு போட்டிகள் தடைபட்டுள்ளன. சில விளை யாட்டுகள் வேறு திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், சில விளையாட்டுகள் முழுமையாக ரத்து செய்யப்பட்டு விட்டன.

புயல் பாதித்த பகுதிகளில் பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டு முழு வீச்சில் மீட்பு பணிகள் நடந்து வரு கின்றன.

இந்தப் புயல் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்க வாய்ப்புள்ளது என அந்த நாட்டின் தேசிய பேரிடர் மீட்பு படை அதிகாரி லுயிசிடோ மென்டோசா கூறினார்

கம்முரி புயல் இந்த ஆண்டு பிலிப்பீன்ஸைத் தாக்கிய 20 ஆவது புயல் ஆகும்.

# ஸ்மார்ட் ரி.வி. பாவனையில் மறைந்திருக்கும் ஆபத்து...!

புதிதாக வாங்கும் ஸ்மார்ட் ரி.விக்கள் மூலம் ஹக்கர்கள் ஊடுருவி சைபர் குற்றங்கள் நிகழ வாய்ப்பு இருப்பதாக அமெரிக்க புலனாய்வு அமைப்பான எவ்.பி.ஐ. எச்சரித்துள்ளது.

இன்டெர்நெட் பயன்பாடு, முக அடையாள அங்கீகாரம், குரல் மூலம் இயக்குதல் போன்ற பல்வேறு நவீன தொழில் நுட்பங்களுடன் அடுத்த தலைமுறைக்கான ஸ்மார்ட் ரி.விக்கள் விற்பனையாகின்றன. இது போன்ற டி.விக்களை பயன்படுத்துவது சவால் நிறைந்தது என்று எவ்.பி.ஐ. எச்சரித்துள்ளது.

கருவிகள் பாதுகாப்பின்றி இருந்தால் ஹக்கர்கள் ஊடுருவி, சனல்களை மாற்றுவது, ஒலி அளவைக் கூட்டுவது, குழந்தைகளுக்கு தேவையில்லாத வீடியோக்களை காட்டுவது போன்றவற்றை செய்ய முடியும் என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அது மட்டுமின்றி, படுக்கை அறையையும் ஸ்மார்ட் ரி.வி. கமரா மற்றும் மைக்ரோபோன் வாயிலாக கண்காணிக்க முடியும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இன்டெர்நட் சேவையை நிறுத்துவதே இப்பிரச்சனைக்கான எளிதான தீர்வு என்று கூறும் நிபுணர்கள், அவ்வப்போது ஸ்மார்ட் ரி.வி. தயாரிப்பாளர்கள் சொப்ட்வேர் அப்டேட் செய்வதும் அவசியமானது என்று வலியுறுத்துகின்றனர்.

# பாகிஸ்தான் முன்னாள் அதிபர் முஷாரப் கடும் சுகவீனத்தில்?



டுபாய்,டிசெ.05

பாகிஸ்தான் முன்னாள் பர்வேஸ் முஷாரப்(வயது 76) அவசர சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் கடந்த 2001 முதல் 2008 ஆம் ஆண்டு வரை அதிபராக இருந்தவர். இவர் கடந்த 2007 ஆம் ஆண்டு நாட்டில் அவசர நிலையை கொண்டு வந்தார். அதன் ஒரு பகுதியாக, நாட்டின் அரசமைப்பு சட்டத்தை அவர் முடக்கி வைத்தார். இது பெரும் எதிர்ப்புக்கு வழிவகுத்தது.

இது தொடர்பாக கடந்த 2013 ஆம் ஆண்டில் முஷாரப் மீது தேசத்துரோக வழக்கு தொடரப்பட்டது. ஆனால் 2016 ஆம் ஆண்டு, மார்ச் மாதம் மருத்துவ சிகிச்சை பெறப்போவதாகத் தெரிவித்து முஷாரப் துபாய்க்கு சென்றார். பின்னர் அவர் நாடு திரும்பவே இல்லை.

இந்த நிலையில், சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த முஷாரப் மீதான தேசத்துரோக வழக்கின் தீர்ப்பை வரும் 28 ஆம் திகதி வெளியிடுவதாக அந்த நீதிமன்றம் அறிவித்தது.

இதனை எதிர்த்து, இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை விசாரித்த நீதிமன்றம், முஷாரப் மீதான தேசத் துரோக வழக்கின் தீர்ப்பை தற்போது நிறுத்தி வைத்துள்ளது.

இந்த நிலையில் முாரப்புக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டமையையடுத்து, நேற்றுமுன்தினம் அவர் டுபாயில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இருதய பிரச்சினை மற்றும் உயர் இரத்த அழுத்தம் காரணமாக அவர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார் என அனைத்துப் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தேசத்துரோக வழக்கில் முஷாரப் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், அவருக்கு மரண தண்டனை அல்லது வாழ்நாள் சிறை விதிக்க முடியும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# பிரேசில் நாட்டில் ஜனாதிபதியை தாக்கத் திட்டம் தீட்டியவர் கைது



பிரேசில் நாட்டு ஜனாதிபதி மீது தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டினார் என ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்நாட்டின் அதிபர் ஜெயிர் போல்சனரோ கடந்த மாதம் 29 ஆம் திகதி, டிரெஸ் கோரக் கோஸ் நகரில் உள்ள இராணுவப் பள்ளியைப் பார்வையிட்டார்.

அப்போது அதிபர் மீது தாக்குதல் நடத்தத் திட்டம் தீட்டினார் என அந்த இராணுவப் பள்ளியில் வேலை பார்த்த ஊழியர் ஒருவரை அதிகாரிகள் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் தனது தாக்குதல் திட்டங்களை புகைப்படங்களாகவும் வீடியோவாகவும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டமையை அடுத்தே அவரை அதிகாரிகள் கைது செய்தனர்.

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுமானால் அவருக்கு 10 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்கும். இது குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

# பூங்கா ராட்டினத்தில் விபத்து; தாய்லாந்தில் 10 பேர் காயம்



தாய்லாந்தில் பொழுதுபோக்கு பூங்காவில் சுழல் ராட்டினத்தில் ஏற்பட்ட விபத்தில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

மத்திய தாய்லாந்தில் உள்ள லாப்புரி என்ற இடத்தில் பொழுதுபோக்கு பூங்கா அமைக்கப்பட்டிருந்தது. இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ராட்டினங்களில் ஏராளமானோர் விளையாடி மகிழ்ந்தனர்.

அப்போது சுழல் ராட்டினம் ஒன்றில் ஏறியவர்கள் உற்சாகக் கூச்சலிட்டவாறே விளையாடிக் கொண்டிருந்தனர். அச்சமயம் எதிர்பாராதவிதமாக ராட்டினத்தில் பிணைத்திருந்த கம்பி விடுபட்டது.

இதனைத் தொடர்ந்து ராட்டினத்தில் அமர்ந்திருந்தவர்கள் தூக்கி வீசப்பட்டனர். இந்த விபத்தில் சிக்கியவர்கள் காயங்களுடன் மீட்கப்பட்டு அருகில் இருந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



நன்றி:- ஆதவன் இணையம்

# கோட்டாபாய ராஜபக்ஷவின் வெளியுறவுக் கொள்கை

## எவ்வாறு அமையப்போகின்றது...?

கோட்டாபய ராஜபக்ஷ புதிய அரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட முன்னரே மேற்கத்திய ஊடகங்களால் சீனாவின் ஆள் என்று அழைக்கப்பட்டவர். அவர் தனது தேர்தல் பிரச்சாரங்களில் வெளிநாடுகளோடு செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் தொடர்பாக பேசியிருக்கிறார்.

அந்த உடன்படிக்கைகளை மீளாய்வு செய்யப்போகிறார் எனவும் அவர் தனது வாக்காளர்களுக்கு வாக்குறுதி அளித்திருக்கிறார்.

அவர் அவ்வாறு உடன்படிக்கைகள் என்று கருதியவை நான்கு.

முதலாவது –ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் 2015இல் முன்னைய அரசாங்கம் நிறைவேற்றிய முப்பதின் கீழ் ஒன்று ஐ.நா. தீர்மானம்.

இரண்டாவது – அமெரிக்காவின் நிதி உதவி பெறுவதற்கான மில்லேனியம் நிதி உடன்படிக்கை.

மூன்றாவது – சோபா உடன்படிக்கை.

நான்காவது – கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவைகள் உடன்படிக்கை.

இதில் முதலாவது ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானம்.

அத்தீர்மானத்தை தாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று ராஜபக்ஷாக்கள் ஏற்கனவே அறிவித்து விட்டார்கள்.

புதிய வெளியுறவு அமைச்சரும் பதவியேற்றதும் அதை உறுதிப்படுத்தி இருக்கிறார். அத்தீர்மானமானது இலங்கைதீவில் நிலைமாறுகால நீதியை ஸ்தாபிப்பதற்குரியது. நிலைமாறுகால நீதி எனப்படுவது பொறுப்புக்கூறல்தான். அதாவது இறந்த காலத்திற்கு பொறுப்புக் கூறுவது.

ஆனால் இறந்த காலத்துக்கு பொறுப்பு கூறினால் அதில் முதலாவதாக விசாரிக்கப்படப் போவது ராஜபக்ஷ குடும்பம்தான். அவர்களோடு சேர்ந்து நிற்கும் படைப் பிரதானிகளும் தான். எனவே பொறுப்புக் கூறலை ஏற்றுக் கொண்டால் விசாரணைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கும்.

அவர்களைப் பொறுத்தவரை இது ஒரு சட்டப் பொறி. இப்பொறியில் இருந்து தப்புவதற்காகவே அவர்கள் தமது படைப் பிரதானிகளுக்கு ராஜதந்திரிகள் அந்தஸ்தைக் கொடுத்து வெளிநாடுகளுக்கு தூதுவர்களாக அனுப்பினார்கள். எனினும் அது எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை.

இந்நிலையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இருக்கவில்லை. எனவே பொறுப்புக்கூறல் என்ற விடயத்தில் புதிய ஜனாதிபதியிடம் புதிய அணுகுமுறை எதையும் எதிர்பார்ப்பது கடினம்.

இரண்டாவது – உடன்படிக்கை மிலேனியம் சவால் உடன்படிக்கை. இந்தச்உடன்படிக்கையின்படி இலங்கைத் தீவு அதன் காணி உரிமையாளர்கள் பற்றிய டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட முழுத் தகவல்களையும் நிதி உதவி வழங்குனர்களுக்குக் கொடுக்க வேண்டும்.

அதாவது இலங்கையின் நிலப்பரப்பில் உள்ள எல்லாக் காணிகள் பற்றிய விவரங்களையும் அவற்றின் எண்ணிம வடிவத்தில் குறிப்பிட்ட நிதி உதவி வழங்குநரிடம் கொடுக்க வேண்டும். அப்படி கொடுத்து ஏனைய நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் பெருந்தொகை பணம் வழங்கப்படும். அதன்மூலம் லட்சத்துக்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை உருவாக்கலாம்.

முன்னைய அரசாங்கம் அந்த உடன்படிக்கைக்கு பெருமளவுக்குச் சம்மதித்திருந்தது. அந்த அரசாங்கத்தை நிதி உதவிகளின் மூலம் தாங்கிப் பிடிப்பதற்கு அமெரிக்கா செய்யும் ஒரு தந்திர நகர்வாகவே ராஜபக்ஷக்கள் அதைப் பார்த்தார்கள. எனவே மைத்திரிபால சிறிசேன மூலம் அதற்குத் தடைகள் போட்டார்கள். இப்பொழுது அந்த உடன்படிக்கை குறித்து அவர்களே பதில் கூற வேண்டியிருக்கிறது.

மூன்றாவதும் நாலாவதும் – சோபா உடன்படிக்கையும் கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவைகள் உடன்படிக்கையும். ஏற்கனவே 2007 இல் மஹிந்தவுடன் செய்து கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கையின் புதிய வடிவம்தான் கையகப்படுத்தல் மற்றும் குறுக்கு சேவைகள் உடன்படிக்கை.

புதிய நிலைமைகளுக்கு ஏற்ப இதைப் புதுப்பிப்பதற்கு அமெரிக்கா விரும்பியது. ஆனால் மைத்திரிபால சிறிசேன அதற்கு சம்மதிக்கவில்லை.ராஜபக்ஷக்கள் அதற்கு சம்மதிப்பவர்களாகத் தெரியவில்லை.

அமெரிக்காவுடனான இவ்விரு உடன்படிக்கைகளின் முழு விவரங்களும் நாட்டுக்குக் கூறப்படவில்லை. அவற்றில் என்ன இருக்கிறது என்பது பெரும்பாலானவர்களுக்கு தெரியாது.

அவற்றில் இருப்பதை விடவும் அவற்றைப்பற்றி வெளியில் கூறப்பட்ட கதைகளே அதிகம் என்று ஒரு கருத்து உண்டு. அந்தச்உடன்படிக்கைகளின்படி அமெரிக்கப் படைகள் இலங்கைத்தீவில் கட்டுப்பாடுகளின்றி நடமாடலாம். தமது சீருடைகளுடன் திரியலாம். அவர்கள் நாட்டுக்குள் வரும் போதும் போகும் போதும் நாட்டின் வழமையான சுங்க விதிகளுக்கு உட்படத் தேவையில்லை.

அவர்கள் கொண்டு வரும் பயணப் பொதிகளை விமான நிலையங்களில் சோதிக்க முடியாது என்றெல்லாம் அந்த உடன்படிக்கைகளில் இருப்பதாக கதைகள் பரப்பப்பட்டுள்ளன.

அந்த உடன்படிக்கைகள் இன்னமும் இரு தரப்பாலும் இறுதியாக்கப்படாத காரணத்தால் அவை வெளியிடப்படவில்லை என்று அமெரிக்க தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன. அவற்றின் இறுதி வடிவம் நாட்டுக்கு காட்டப்படாத வரையிலும் அவை பற்றிய வதந்திகளே அதிகம் உலவும்.

இந்நான்கு உடன்படிக்கைகளையும் தாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று ராஜபக்ஷ குடும்பம் தேர்தல் பரப்புரைகளில் வாக்குறுதி வழங்கியிருந்தது.

இந்நான்கு உடன்படிக்கைகளும் மேற்கு நாடுகளுக்குச் சாதகமானவை என்று அவர்கள் கருதுகிறார்கள். இந்நான்கு உடன்படிக்கைகள் தொடர்பிலும் தாம் மீளாய்வு செய்யப்போகிறார்கள் என அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

இதில் குறிப்பாக ஜ.நா. தீர்மானத்தை மீளாய்வு செய்வது கடினம். ஏனெனில் அது ஓர் அனைத்துலக உடன்படிக்கை. அனைத்துலக சமூகத்தோடு இலங்கை அரசாங்கம் செய்துகொண்ட உடன்படிக்கை.

அந்த உடன்படிக்கையை எடுத்த எடுப்பில் நிராகரிக்க முடியாது. அப்படிச் செய்தால் அது உலக சமூகத்தோடு முரண்பாடுகளை தோற்றுவிக்கும். இது இலங்கை அரசாங்கத்தை ராஜிய ரீதியாகத் தனிமைப்படுத்தும். எனவே முப்பதின் கீழ் ஒன்று தீர்மானத்தை புதிய ஜனாதிபதி அவர் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய முறிக்க முடியாது. அது இலங்கை அரசாங்கத்தை அனைத்துலக அளவில் தனிமைப்படுத்தும்.

ஏற்கனவே புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டபின் அவருக்கு மேற்கத்திய தலைவர்கள் உடனடியாக வாழ்த்து தெரிவிக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் அவருக்கு வாழ்த்து தெரிவித்த அமெரிக்க பிரதானிகளும் மிகவும் கவனமாக வார்த்தைகளை பயன்படுத்தியிருக்கிறார்கள். 'நல்லிணக்கம்', 'பொறுப்புக்கூறல்','இந்தோ பசிபிக் பிராந்தியம்' போன்ற வார்த்தைகளை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

நல்லிணக்கம் அல்லது பொறுப்புக்கூறல் இரண்டுமே நிலைமாறுகால நீதிக்கு உட்பட்டவைதான். இந்தோ பசிபிக் மூலோபாயம் எனப்படுவது சீனாவுக்கு எதிரான அமெரிக்க – இந்திய வியூகம்தான்.

இந்த வியூகத்திற்குள் கேந்திர முக்கியத்துவம் மிக்க ஓரிடத்தில் அமைந்திருக்கும் சிறிய தீவானது தான் நினைப்பது போல வெளியுறவு முடிவுகளை எடுக்க முடியாது என்பதனை அவர்கள் ராஜபக்ஷக்களுக்கு மறைமுகமாக உணர்த்த முற்படுகிறார்கள்.

அதேசமயம் புதிய ஜனாதிபதி தனது வெளியுறவுக் கொள்கையானது எல்லா நாடுகளையும் சம தூரத்தில் வைத்திருக்கும் என்று கூறியுள்ளார். 'இந்தியாவின் பாதுகாப்புக்கு நலன்களுக்குப் பாதகமாக அமையக்கூடிய எந்த ஒரு காரியத்திலும் நாம் ஈடுபட மாட்டோம்'என்று கூறுகிறார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டு கால குத்தகைக்கு கொடுத்திருப்பது ஏற்புடையதல்ல என்று கூறுகிறார். 'கேந்திர முக்கியத்துவம் உடைய ஒரு துறைமுகத்தை அவ்வாறு கொடுப்பது ஏற்புடையதல்ல. அதன் கட்டுப்பாடு எம்மிடம் இருக்க வேண்டும். நாம் மீண்டும் பேச்சு நடத்த வேண்டி இருக்கிறது' என்றும் கூறியுள்ளார்.

அதாவது தனது வெளியுறவுக் கொள்கையில் பிராந்தியத்தில் பேரரசுகளுக்கு இடையில் இருக்கும் நலன் சார் போட்டியில் சிக்குப்படாத ஒரு வெளியுறவுக் கொள்கையைத் தான் வடிவமைக்கப் போகிறார் என அவர் ஓர் இந்திய ஊடகத்துக்கு அண்மையில் வழங்கிய பேட்டியில் கூறியிருக்கிறார்.

அவர் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டவுடன் தெரிவித்த கருத்துக்களையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். எந்த ஒரு வெளிச்சக்திக்கும் இறைமையை விட்டுக்கொடுப்பதில்லை என்ற தொனிப்பட அவர் உரையாற்றி இருந்தார். ஆனால் இங்குள்ள நடைமுறைப் பிரச்சினை என்னவென்றால் அவரும் அவருடைய தமையன் மஹிந்தவும் இறந்தகாலத்தை விட்டு வெளியில் வர முடியுமா என்பதுதான்.

ஏனெனில் அவர்கள் இருவரும் இறந்த காலத்தின் கைதிகள். இறந்த காலம்தான் அவர்களுடைய தேர்தல் முதலீடு. இறந்த காலம்தான் அவர்களுடைய பலம். ஆனால் அதுவே அவர்களுடைய சிறை. அவர்கள் இருவரும் இறந்த காலத்தின் கைதிகள். ராஜபக்ஷகுடும்பத்துக்குள் போர்க்குற்றச்சாட்டு இந்த இருவர் மீதும்தான் உண்டு. ஏனையவர்கள் மீது இல்லை. எனவே எது அவர்களுடைய பலமோ அதுவே அவர்களுக்கு பொறியுமாகக் காணப்படுகிறது. இந்தப் பொறிக்குள் இருந்து அவர்களால் விடுபட முடியுமா?

அரசுத் தலைவருக்கான தேர்தலில் அவர்கள் பெற்ற வெற்றியும் இந்த இறந்த காலத்தின் விளைவுதான். அனுராதபுரத்தில் ருவன்வெளிசயவில் பதவியேற்றபோது தன்னை வெற்றி பெற வைத்த சிங்கள – பௌத்த வாக்காளர்களுக்கு அவர் கூற விழைந்த செய்தியும் அந்த இறந்த காலத்தின் தொடர்ச்சிதான். அவருடைய பாதுகாப்பு செயலாளரும் அதன் தொடர்ச்சிதான்.

எனவே அவர்கள் இறந்த காலத்தின் தொடர்ச்சியாகத்தான் இன்றுவரையிலும் காணப்படுகிறார்கள் அந்தக் இறந்தகாலத்தை விட்டு வெளியே வந்து ஒரு வெளியுறவுக் கொள்கையை அவர்களால் வகுத்துக் கொள்ள முடியுமா?

சீனாவுடனான உறவு வெறுமனே வர்த்தக நோக்கிலானது என்று அவர் கூறுகிறார். ஆனால் அது உண்மையல்ல. சீனாவை பொறுத்தவரை அது ஒரு கடன் பொறி. உலகம் முழுவதும் அந்தப் பொறியை சீனா வைக்கிறது.

வறிய நாடுகளின் தேவையைப் பயன்படுத்தி ஆசிய,ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளை சீனா தனது கடன் பொறிக்குள் சிக்க வைத்திருக்கிறது. இது ஒரு வியூகம். வெளித்தோற்றத்திற்கு அந்த உதவிகள் முதலீடுகளாக தெரியலாம்.

ஆனால் நடைமுறையில் அது ஓர் அரசியல், இராணுவ, ராஜிய வியூகம்தான். இலங்கைத்தீவு அந்த வியூகத்துள் விழுந்துவிட்டது. அதிலிருந்து வெளிவர முடியுமா? குறிப்பாக ராஜபக்ஷக்கள் வெளிவர முடியுமா?

அப்படி வெளி வருவதென்றால் அவர்கள் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளோடு கணிசமான அளவுக்குத் தம்மைச் சுதாகரித்துக் கொள்ள வேண்டியிருக்கும், அதனால் பொறுப்புக்கூறலை ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கும்.

இது சாத்தியமா? இது சாத்தியக் குறைவு என்பதனால்தான் அவர்கள் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவில் ஒருவித சமநிலையைப் பேணுவதன் மூலம் மேற்கு நாடுகளை வெட்டி ஓடலாம் என்று நம்புகிறார்களா?

# இது பௌத்த நாடு; ஆட்சியும் அதன் அடிப்படையிலேயேதான்!

## பல்கலைக்கழகத் துணைவேந்தர்களுடனான கூட்டத்தை தனிச் சிங்களத்தில் நடத்தினார் உயர்கல்வி அமைச்சர்



கொழும்பு, டிசெ. 05

இலங்கை பௌத்த நாடு. இந்த அரசு அதனை அடிப்படையாக வைத்தே ஆட்சியை முன்னெடுக்கும் என்று உயர் கல்வி அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், தகுதி வாய்ந்த அதிகாரி, பீடாதிபதிகள் மற்றும் பதிவாளர் ஆகியோருடன் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை உயர் கல்வி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், நேற்று முன் தினம் கலந்துரையாடலும் தனிச் சிங்கள மொழியிலேயே முன்னெடுக்கப்பட்டது என்று அறியமுடிகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடையும் அனைவருக்கும் பல்கலைக்கழக வாய்ப்பை வழங்கவேண்டும் என்ற குறிக்கோள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

அதனால் அடுத்து வரும் ஆண்டுகளில் பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கும் மாணவர்களின் எண்ணிக்கை பெருமளவால் அதிகரித்துச் செல்லும். அதற்கமைய தற்போது பல்கலைக்கழகங்களில் காணப்படும் பௌதீக வளங்களை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கான திட்டங்களை துணைவேந்தர்கள், பீடாதிபதிகள் முன்னெடுக்கவேண்டும் என்று இந்தக் கலந்துரையாடலில் உயர் கல்வி அமைச்சர் வலியுறுத்தினார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ். பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசுவாமி, விவசாய பீடாதிபதி கலாநிதி எஸ்.சூரியகுமார், விஞ்ஞான பீடாதிபதி பிறின்ஸ் ஜெயதேவன், வவுனியா வளாக வணிகக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி ஏ.புஸ்பநாதன் மற்றும் பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் என்.ராஜவிசாகன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரதமரின் மக்கள் தொடர்பாடல் பிரிவு மீண்டும் ஆரம்பித்துவைப்பு

கொழும்பு, டிசெ. 05

பிரதமரின் பொதுமக்கள் தொடர்பு பிரிவு நேற்று முன் தினம் மீளவும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அரசு கவனம் செலுத்தப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் பொது மக்கள் தகவல் வழங்குவதற்கு இந்தப் பிரிவு மீளவும் திறந்துவைக்கப்பட்டது.




கொழும்பு 3இல் 101, ஆர்.ஏ டீ மெல் மாவத்தையில் இந்தப் பிரிவுக்கான அலுவலகத்தைப் பிரதமர் நேற்று முன் தினம் திறந்து வைத்தார்.

இந்த அலுவலகத்துக்குப் பொது மக்களால் வழங்கப்படும் மனுக்கள் – முறைப்பாடுகள் தொடர்பில் உரிய அரச உயர் மட்டத்துக்குத் தகவல் வழங்கப்படும் என்று பிரதமர் செயலகம் தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மக்கள் தொடர்பு அலுவலகத்தைத் திறப்பதன் முக்கிய நோக்கம், பொருத்தமான அரசு நிறுவனத்துடன் கலந்தாலோசித்த பின்னர் பொது மக்களின் விடயங்களுக்கு உடனடி தீர்வுகளை வழங்குவதாகும்.

ஏராளமான மக்கள் தினமும் வந்து தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண என்னைச் சந்திக்கிறார்கள். எனவே இந்த அலுவலகம் அவர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்தார்.

இதேவேளை, பிரதமரின் பொதுமக்கள் தொடர்பு பிரிவு 2017ஆம் ஆண்டு முன்னைய அரசால் இதே முகவரியில் இயக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுவிஸ் தூதரக பணியாளர் கடத்தல்; ஓரிரு வாரங்களுள் உண்மை வரும்

### கூறுகின்றார் அமைச்சர் கெஹலிய

கொழும்பு, டிசெ. 05

இலங்கையிலுள்ள சுவிஸ் தூதரக ஊழியர் கடத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் எதிர்வரும் ஓரிரு வாரங்களுக்குள் சாட்சியுடன் உண்மைகள் வெளிப்படுத்தப்படும் என்று இராஜாங்க அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையிலுள்ள சுவிஸ் தூதரக ஊழியர் துப்பாக்கி முனையில் அச்சுறுத்திக் கடத்தப்பட்டார் என்று ராஜித சேனாரத்ன கூறுகின்றமை நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயலாகும். இவர்கள் இதற்கு முன்னரும் இவ்வாறான கீழ்தரமான அரசிய லில் ஈடுபட்ட முயற்சித்து அந்த முயற்சி கள் தோல்வியடைந்தமையால் மீண் டும் அவ்வாறு செயற்பட ஆரம்பித்



துள்ளனர். எனவே இவ்வாறு வெளிநாடுகளில் இலங்கையைக் காட்டிக் கொடுக்கும், நாட்டுக்கு அவப் பெயரை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கின்றோம் – என்றார். (ஐ)

## பால்நிலை வன்முறைக்கு எதிரான விழிப்பூட்டல் செயற்பாடு வடக்கில்

யாழ்ப்பாணம்,. டிசெ. 05

யாழ் சமூக செயற்பாட்டு மையம் (JSAC) முன்னெடுத்து வரும் பால்நிலை வன்முறைக்கு எதிரான பதினாறு நாள் விழிப்புணர்வு செயற்பாடுகள் பெண்க




ளுக்கும், சிறுமிகளுக்கும் சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான சூழலினை உருவாக்குவோம் என்னும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனொரு செயற்பாடாக இன்று வியாழக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்கள், தனியார் பஸ்கள் மற்றும் ஓட்டோக்கள் போன்றவற்றில் விழிப் புணர்வு துண்டறிக்கைகள் ஒட்டப்படவுள்ளன.

அத்துடன், விழிப்புணர்வு துண்டறிக்கைகளும் பொது இடங்களில் வழங்கப்படவுள்ளன.

இதற்கு அனைத்து போக்குவரத்துச் சங்கங்களும் முழுமையாக தங்களுடைய ஒத்துழைப்பினை வழங்கியுள்ளன என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஓட்டோவில் குப்பை கூடை!



### சாரதிக்குக் குவியும் பாராட்டுகள்

கொழும்பு, டிசெ. 05

ஓட்டோவில் பயணிப்போர் குப்பைகளை வீதியில் வீசாமல் இருக்கத் தனது ஓட்டோவில் குப்பை கூடை ஒன்றைப் பொருத்தியுள்ளார் அதன் ஓட்டுநர். அந்தச் செயலைப் பலரும் பாராட்டி வருகின்றனர்.

தென்னிலங்கையைச் சேர்ந்த ஓட்டோச் சாரதி ஒருவரே அவ்வாறு செய்துள்ளார். அது தொடர்பிலான படங்களுடன் அவரது கருத்தும் தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

என்னுடைய ஓட்டோவில் பயணிப்பவர்கள் ஏதாவது சாப்பிடுவார்கள். அதில் மிஞ்சும் கழிவை வெளியில் தூக்கி எறிவார்கள். இவ்வாறு என் கண் முன்னால், இந்தச் சூழலுக்குச் சென்றுசேரும் குப்பைகளைச் சரி செய்ய நினைத்தேன். அதனால் என்னுடைய ஓட்டோவில் ஒரு குப்பை கூடை ஒன்றைப் பிரத்தியோகமாக நிறுவியுள்ளேன்.

பயணிகள் தங்களுடைய குப்பையை இந்தக் கூடையில் போடலாம். மாலையில் வீடு திரும்பியதும் அல்லது குப்பை கொட்ட அரசு ஒதுக்கியுள்ள இடங்களைத் தாண்டும்போது சேகரித்த குப்பைகளை அங்கு கொட்டிவிடுகிறேன். என ஓட்டோச் சாரதி தெரிவித்துள்ளார். (ஐ)



# தொடரைக் கைப்பற்றியது நியூஸிலாந்து அணி!



நியூஸிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சமனிலையானதன் விளைவாக நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரை 1–0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

நியூஸிலாந்து – இங்கிலாந்து அணிகள் மோதிய 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஹேமில்டனில் இடம்பெற்றது.

நியூஸிலாந்து அணி முதல் இன்னிங்சில் 375 ஓட்டங்களை பெற்றது. இதற்கு இங்கிலாந்து பதிலடி கொடுத்தது. அந்த அணி முதல் இன்னிங்சில் 476 ஓட்டங்களைக் குவித்தது.

101 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்சை விளையாடிய நியூசிலாந்து நேற்று முன் தினம் 4ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அணித் தலைவர் வில்லியம்சன் 37 ஓட்டங்களுடனும் முன்னாள் அணித்தலைவர் டெய்லர் 31 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 5 ஆவது மற்றும் கடைசி நாள் ஆட்டம் இடம்பெற்ற நிலையில் நியூசிலாந்து அணி தொடர்ந்து விளையாடியது.

வில்லியம்சனும், டெய்லரும் அபாரமாக விளையாடி சதம் அடித்தனர். முதலில் வில்லியம்சன் 231 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 100 ஓட்டங்களை தொட்டார். 76ஆவது டெஸ்டில் விளையாடும் அவருக்கு இது 21ஆவது நூறு ஓட்டங்களாகும்.

அதைத்தொடர்ந்து டெய்லர் 184 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்றார். இதில் 11 – நான்கு ஓட்டங்களும் 2 ஆறு ஓட்டங்களும் அடங்கும். ஆறு ஓட்டங்களின் உதவியுடன் அவர் சதத்தை தொட்டார்.

96ஆவது டெஸ்டில் விளையாடும் டெய்லருக்கு 19 ஆவது சதம் ஆகும். டெஸ்டில் அதிக சதம் அடித்த நியூஸிலாந்து வீரர்களில் முதல் 2 இடங்களில் அவர்கள் உள்ளனர்.

நியூஸிலாந்து அணி 2 விக்கெட் இழப்புக்கு 241 ஓட்டங்களை எடுத்திருந்த போது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. அதோடு போட்டி முடிந்து டெஸ்ட் ஆட்டம் சமநிலையானது. வில்லியம்சன் 104 ஓட்டங்களுடனும் டெய்லர் 105 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

இந்த டெஸ்டில் மொத்தம் 5 சதங்கள் பெறப்பட்டுள்ளன. நியூசிலாந்து தரப்பில் லாதம், வில்லியம்சன், டெய்லர் ஆகியோரும், இங்கிலாந்து தரப்பில் பர்ன்ஸ், ஜோரூட் ஆகியோரும் சதம் அடித்தனர்.

இங்கிலாந்து அணித்தலைவர் ஜோரூட் இரட்டைச் சதம் அடித்தார். அந்த அணி ஒரு இன்னிங்ஸ் மட்டுமே விளையாட்டியது.

இந்த டெஸ்ட் போட்டி சமநிலையடைந்ததன் மூலம் நியூசிலாந்து அணி டெஸ்ட் தொடரை 1 – 0 என்ற கணக்கில் கைப்பற்றியது. முதல் டெஸ்டில் அந்த அணி இன்னிங்ஸ் மற்றும் 65 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது. 20 ஓவர் தொடரை இங்கிலாந்து 3 – 2 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஒருநாள், இருபதுக்கு இருபது போட்டிகளின் சிறந்த பந்து வீச்சாளர் விருது மலிங்கவுக்கு

கடந்த ஆண்டு உள்ளூர் மற்றும் சர்வதேச கிரிக்கெட் துறைகளில் திறமையை வெளிப்படுத்திய இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை மாலை இந்த விருது வழங்கும் விழா இடம்பெற்றுள்ளது.

இதன்போது மொத்தமாக 45 விருதுகள் வழங்கப்பட்டிருந்தன.

ஒருநாள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளின் சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதை வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க சுவீகரித்திருந்தார்.

## ஆஸி. அணி அபார வெற்றி

அடிலெய்டில் மைதானத்தில் நடைபெற்ற பகலிரவு டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தானை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆஸ்திரேலியா அபார வெற்றி பெற்றுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 ரி –20 மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றது. ரி – 20 போட்டியை 2 –1 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா வெற்றி கொண்டது.

இதையடுத்து, இரு அணிகளுக்கும் இடையே நடைபெற்ற முதல் பகல் இரவு டெஸ்ட் போட்டியிலும் பாகிஸ்தானை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆஸ்திரேலியா முன்னிலை பெற்றது.

இந்தநிலையில், இரு அணிகளும் மோதிய இரண்டாவது பகல் இரவு டெஸ்ட் போட்டி அடிலெய்ட் மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

இதையடுத்து, அந்த அணியில் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக டேவிட் வோர்னர் மற்றும் ஜோ பர்ன்ஸ் ஆகியோர் களமிறங்கினர்.

ஜோ பர்ன்ஸ் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்த நிலையில் மார்கஸ் லபுஸ்சேன் உடன் ஜோடி சேர்ந்த வோர்னர் பாகிஸ்தான் பந்துவீச்சை துவம்சம் செய்தார். இருவீரர்களும் சதம் விளாசினர். மார்கஸ் 162 ஓட்டகளில் ஆட்டமிழந்தார். அதிரடியாக விளையாடிய டேவிட் வோர்னர் முச்சதம் பெற்றார்.

ஆஸ்திரேலியா அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 589 ஓட்டங்கள் எடுத்த நிலையில் முதல் இன்னிங்சை இடைநிறுத்திக் கொண்டது. வோர்னர் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 335 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்.

இதையடுத்து, தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் 302 ஓட்டங்களில் சகல விக்கட்டுகளையும் இழந்தது.

இதனால் அந்த அணி 'பொலோ ஒன்' நிலையைச் சந்தித்தது. பாகிஸ்தான் அணியின் 8 ஆவது வீரராக களமிறங்கிய பந்து வீச்சாளர் யாசிர் 113 ஓட்டங்களும், பாபர் ஆசம் 97 ஓட்டங்களும் பெற்றனர். அவுஸ்ரேலியா தரப்பில் ஸ்டோர்க் 6 விக்கெட்டுகளையும், பேட்கம்மின்ஸ் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

387 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 39 ஓட்டங்கள் என்ற மோசமான நிலையில் இருந்தது.



இந்தநிலையில் டெஸ்ட் போட்டியின் 4ஆவது நாளான நேற்று முன் தினம் ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் பாகிஸ்தான் வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர்.

சற்று நிலைத்து நின்று விளையாடிய ஷான் மசூத் அதிகபட்சமாக 68 ஓட்டங்களை பெற்றார் இறுதியில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த பாகிஸ்தான் 239 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

இதன்மூலம் பாகிஸ்தானை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 48 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அவுஸ்ரேலியா அபார வெற்றி பெற்றது. ஆஸ்திரேலியா தரப்பில் அந்த அணியின் நாதன் லயன் அதிகபட்சமாக 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இரண்டு டெஸ்டிலும் சிறப்பாக விளையாடிய ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னருக்கு ஆட்ட நாயகன் மற்றும் தொடர் நாயகன் விருது வழங்கப்பட்டது.

## நேபாளம் தொடர்ந்தும் முன்னிலை!

13 ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நேபாளத்தின் காத்மண்டு மற்றும் பொக்காரா நகரங்களில் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகின்றன.

இதன்படி, இதுவரை நிறைவடைந்த போட்டிகளின் அடிப்படையில் இலங்கை குழாம் 5 தங்கப்பதக்கங்கள், 12 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 18 வெண்கலப் பதக்கங்களுடன் 35 பதக்கங்களை வென்று பதகப் பட்டியலில் மூன்றாமிடத்தில் உள்ளது.

இந்தப் போட்டித் தொடரின் முதல் நாளில் நடைப்பெற்ற டைக்கொண்டோ போட்டியின் ஆண்கள் பிரிவில் ரணுக்க பிரபாத் அபாரமாக விளையாடி இலங்கைக்கு முதல் தங்கப் பதக்கத்தை வென்று கொடுத்தார்.

இதேபோட்டியில் கலப்பு இரட்டையர் பிரிவிலும் இலங்கை தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டது.

முதல் நாளில் இலங்கை சார்பாக பதக்கங்களை பெற்ற விளையாட்டாக டைக்கொண்டோ திகழ்கின்றது.

இந்தப் போட்டியில் இலங்கை முதல் தங்கத்தை வென்றதோடு 2 தங்கப் பதக்கங்களையும் 3 வெள்ளிப் பதக்கங்களையும் 4 வெண்கலப் பதக்கங்களையும் வென்று மொத்தம் 9 பதக்கங்களை அள்ளியுள்ளது.

இதேவேளை, கராத்தே போட்டியில் இலங்கைக்கு 4 பதக்கங்கள் கிடைத்துள்ளன. கராத்தே போட்டிப் பிரிவில் இலங்கை இதுவரையில் ஒரு வெள்ளிப்பதக்கமும் 3 வெண்கலப் பதக்கங்களுடன் நான்கு பதக்கங்களை வென்றெடுத்துள்ளது.




இதனிடையே, கரப்பந்தாட்டத்தில் வெண்கலப் பதக்கத்தை இலங்கை சுவீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பதக்கப்பட்டியலில் 19 தங்கம் 5 வெள்ளி 9 வெண்கலப் பதக்கங்களுடன் நேபாள அணி மொத்தமாக 33 பதக்கங்களை பெற்று தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.

இந்திய அணி 10 தங்கம், 12 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களுடன் மொத்தமாக 27 பதக்கங்களை பெற்று இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது.

பாகிஸ்தான் 2 தங்கப்பதக்கங்களையும், 5 வெள்ளிப் பதக்கங்களையும், 8 வெண்கலப் பதக்கங்களையும் பெற்று மொத்தமாக 15 பதக்கங்களுடன் நான்காவது இடத்தில் உள்ளது.

அதேவேளை, பங்களாதேஸ் மற்றும் மாலைதீவு அணிகள் தலா ஒரு தங்கப் பதக்கங்களை பெற்றுள்ளன.

பூட்டான் அணி ஒரேயொரு வெண்கலப் பதக்கத்தை மாத்திரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை 2 தேசங்களாக பிரிக்கப்படவேண்டும் என விஞ்ஞாபனத்தில் எங்குமே தெரிவிக்கப்படவில்லை

## பிரிட்டன் கொன்சர்வேட்டிவ் கட்சியின் பிரதித் தலைவர் விளக்கம்

லண்டன், டிசெ. 05

இலங்கை இரண்டு தேசங்களாகப் பிரிக்கப்படவேண்டும்என கொன்சர்வேட்டிவ் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட வில்லை என அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் போல் ஸ்குலே தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலுக் காக கொன்சர்வேட்டிவ் கட்சி முன்வைத் துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை இரண்டு தேசங்களாகப் பிரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக டுவிட்டரில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்த விடயம் தொடர்பாக நேற்று டுவிட்டரில் கருத்து தெரிவித்துள்ள கொன் சர்வேட்டிவ் கட்சியின் பிரதித் தலைவர், இலங்கை இரண்டு தேசங்களாகப் பிரிக் கப்படவேண்டும் என கொன்சர்வேட்டிவ் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட வில்லை.

நல்லிணக்கம், ஸ்திரத்தன்மை மற்றும் நீதியை அடைவதற்கான சர்வதேச முயற்சிகளுக்கு நாங்கள் தொடர்ந்து ஆத ரவளிப்போம். இரு மாநிலம் தொடர்பான கூற்று மத்திய கிழக்கு நாடுகளுடன் மட்டுமே தொடர்புடையது எனப் பதிவிட் டுள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, இலங்கை இரண்டு தேசங்களாக பிரிக்கப்பட வேண் டும் என தெரிவிக்கப்பட்டமை பெரும் அச்சுறுத்தலாகும் எனத் தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## மீண்டும் அரசியலில் தீவிரம் காட்டும் சஜித்



கொழும்பு, டிசெ. 05

ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்வி யைத் தொடர்ந்து, ஒதுங்கியிருந்த சஜித் பிரேமதாஸ இன்று முதல் மீண்டும் அரசியல் விவகாரங்களில் தீவிரமாக ஈடுபடவுள்ளார்.

இதற்கு முன்னோடியாக, இன்று கொழும்பு 02 வோக்ஸ்ஹால் வீதியிலுள்ள உள்ள புதிய ஜனநாயக முன்னணியின் தேர்தல் செயல்பாட்டு அலுவலகத்தில் பொதுமக்கள் சந்திப்பில் ஈடு படவுள்ளார்.

சஜித் பிரேமதாஸ மத நடவடிக்கைகளில் கலந்துகொண்டு இன்று முதல் நாடு முழுவதும் உள்ள விகாரைகளில் பொதுமக்களைச் சந்திப் பார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார். (ஐ)

# ஈழத்தை உருவாக்கும் முயற்சியில் பிரிட்டன்!

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 05

பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தலுக்காக கொன்சவேட் டிவ் கட்சி முன்வைத்துள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் இலங்கை இரண்டு அரசுகளாக பிரிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது எமது நாட்டின் இறையாண் மைக்கு விடுக்கப்படும் பாரிய அச்சுறுத்தல் என நாடாளு மன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 13ஆம் திகதி இடம்பெற இருக்கின்றது. இதற்காக அந்த நாட்டு ஆளும் கட்சியான கொன்சர்வேட்டிவ் கட்சி கடந்த 25ஆம் திகதி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருந்தது. அதில் இலங்கையில் இடம்பெறும் பிரச்சினைக்கு தீர்வாக இந்த நாட்டில் இரண்டு அரசுகளை உருவாக்கவேண்டும் என தேர்தல் விஞ்ஞாபனத்தின் 53 ஆம் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதாவது, உலகம்பூராகவும் நல்லிணக்கம், நிலையான தன்மை மற்றும் நீதியை நிலைநாட்ட மேற்கொள்ளும் சர்வதேச ஆரம்பகர்த்தாக்களுக்கு எமது ஆதரவை வழங் குவதுடன் சைப்பிரஸ், இலங்கை, மற்றும் மத்திய கிழக்கு போன்ற தற்போது அல்லது முன்னர் பிரச்சினை இருந்த, இருக்கும் வலயங்களுக்குத் தீர்வாக இரண்டு அரசுகள் உருவாக எமது ஆதரவை வழங்கி வருவோம் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

தமிழீழத்தை உருவாக்குவதற்கே இவர்கள் முயற்சிக் கின்றனர். இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணத்தில் தமிழ் ஈழம் அல்லது வேறு பெயரிலோ தமிழ் அரசு ஒன்று இருந்ததில்லை. அதனால் இவ்வாறான அரசு ஒன்றுக்காக தலையீடு செய்வதற்கு அவர்களுக்கு எந்த நியாயமான காரணமும் இல்லை – என்றார். (ஐ)

## விசேட தேவையுடையோர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நிகழ்வு



கிளிநொச்சி, டிசெ. 05

ஒளரும் வாழ்வு அமைப்பின் நெறிப் படுத்தலில் கிளிநொச்சியில் விசேட தேவையுடையோர் தினம் நினைவு கூரப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஒட்டுசுட்டான் சிவன் கோயில் வளாகத்தில் ஒளரும் வாழ்வு அமைப்பின் நெறிப்படுத்த லில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ள விசேட தேவை யுடைய சிறுவர்கள், துணுக்காய், கரை துறைப்பற்று, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களில் உள்ள விசேட தேவையுடை நபர்களுடன் பணியாற்றும் ஆர்வலர்கள் பங்கு பற்றியிருந்தனர். (ஐ)

## 12 ஆம் திகதி கூடுகிறது அரசமைப்புப் பேரவை

கொழும்பு, டிசெ. 05

அரசமைப்புப் பேரவை எதிர்வரும் 12ஆம் திகதி கூடவுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியர சருக்கான பெயரை ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ பரிந்துரை செய்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

சபாநாயகர் தலைமையில் வழமை யாகக் கூடும் அரசமைப்புப் பேரவைக் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவரும் கலந்து கொள்வார்.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர் இன்றி, அரசமைப்புப் பேரவை கூட வுள்ளது. இதனால் அரசமைப்புப் பேர வையின் செயற்பாடுகளுக்கு சட்டரீதி யான தடைகள் ஏற்படா எனத் தெரி விக்கப்பட்டுள்ளது. (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



# பட்டப்பகலில் நடு வீதியில் இளைஞர் மீது வாள்வெட்டு!

## உயிருக்குப் போராடிய நிலையில் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 05

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வன்முறை கும்பல்களில் ஒன்றான கெமி குழுவின் தலைவரின் சகோதரன் மீது வாள் வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த இளைஞன் வாள்வெட்டுக்கு இலக்காகிய நிலையில், கல்வியங்காடு பிள்ளையார் கோயில் பகுதியில் இருந்து படுகாயங்களுடன் கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டு, யாழ். போதானா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அஜித் (வயது 26) என்ற இளைஞரே வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளார்.

இளைஞர் ஒருவர் வெட்டுகாயங்களுடன் உயிருக்கு போராடிய நிலையில் வீதியில் காணப்படுவதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்ததை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவரை மீட்டு யாழ்.போதான வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அந்த இளைஞனை ஓட்டோவில் ஏற்றி வந்த கும்பல், அப்பகுதியில் வைத்து அவர் மீது சரமாரியாக வாளால் வெட்டிய பின் அவ்விடத்தில் இளைஞனை வீசி விட்டதாகவும், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கஞ்சா கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட முறுகல் நிலையே இந்தத் தாக்குதலுக்கு காரணம் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-07)





## பொதுத் தேர்தல் திகதிகளை பரிந்துரைத்தது ஆணைக்குழு

மார்ச் மாத தொடக்கத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் ஏப்ரல் 25, 27 அல்லது 28 ஆம் திகதிகளில் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அரசியல் கட்சிகளின் பொதுச் செயலாளர்களுக்கும் இடையே நேற்று புதன்கிழமை இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலிலேயே அவர் இதனைக் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது பொதுத் தேர்தல், மாகாண சபைகளுக்கான தேர்தல் ஆகியவற்றை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கட்சிகளின் நிலைப்பாடுகளைக் கேட்டறிந்தது.

இதேவேளை, நாடாளுமன்றைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மார்ச் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதற்காக கோட்டாபயவுடன் சேர்ந்து பயணிக்கத் தயார்

## அமெரிக்கத் தூதுவர் அலைனா தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 05

நாட்டின் போட்டித்தன்மையை அதிகரிக்க – குறிப்பாக பிராந்திய உறவுகளை வலுப்படுத்த, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றை நிலைநாட்ட இலங்கையுடன் இணைந்து செயற்படத் தயார் என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற 2019 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.எஸ்.இ. சர்வதேச மகளிர் மாநாட்டில் பேசிய தூதுவர், வலுவான மற்றும் இறையாண்மை கொண்ட இலங்கைக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இணைந்து பணியாற்ற அமெரிக்கா எதிர்பார்த்துள்ளதாகக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிபதி ராஜபக்ஷவுடன் இணைந்து பணியாற்ற ஆவலுடன் காத்திருக்கிறேன் என வாழ்த்துச் செய்தியை டுவிட்டர் மூலம் தெரிவித்தேன்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, உள்நாட்டு முதலீடுகள் உட்பட, பரஸ்பர நன்மை பயக்கும் உறவுகள், இரு தரப்பு பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மையமாகக் கொண்ட உறவுகளை வலுப்படுத்தத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

அமெரிக்கா இலங்கைக்கான சிறந்த ஏற்றுமதிச் சந்தையாகும். அமெரிக்க நிறுவனங்கள் இந்த நாட்டின் மிகப்பெரிய வெளிநாட்டு முதலீட்டாளர்களில் ஒன்றாக உள்ளன. இலங்கையின் எதிர்காலத்தைப் பாதுகாக்க நிலையான மற்றும் சமமான பொருளாதார வளர்ச்சி அவசியம்.



மேலும் உண்மையான வாய்ப்புகளை உருவாக்கும் முதலீடுகள், பரஸ்பர வர்த்தகம் மற்றும் வேலை வாய்ப்பு என்பன நாட்டுக்கு அதிக வளர்ச்சியைக் கொடுக்கும். எவ்வாறாயினும், துரித வளர்ச்சி, பரந்த உறவு, நிலையான கொள்கை, நிலையான அரசியல் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைப் பொறுத்தே அவை அமையும்.

இவை கூட்டாச்சி, ஒழுங்குமுறை நிலைத்தன்மை, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றைக் குறிக்கின்றன, இது இலங்கையின் போட்டித்தன்மையை அதிகரிக்கும் – என்றார். (ஐ)

## ஐ.தே.க. தலைவராக சஜித்தை நியமிக்காவிடின் மாற்று முடிவு

### ஹரீன் பெர்னாண்டோ அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 05

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் எதிர்க்கட்சித் தலைவராகவும் சஜித் பிரேமதாஸவை நியமிக்காவிட்டால், மாற்றுத் தீர்மானமொன்றுக்குச் செல்லமாட்டோம் எனக் கூற முடியாது என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்ணான்டோ தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எதிர்க்கட்சித் தலைவராகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் சஜித் பிரேமதாஸவை நியமிக்க வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடாக இருக்கிறது.

இதனைத்தான் மக்களும் விரும்புகிறார்கள். எனவே, மக்களின் எதிர்பார்ப்பைபூர்த்தி செய்யும் வகையில், தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்று நாம் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறோம்.

எமது கட்சியில் இரண்டு தரப்புக்கள் உருவாகவில்லை. நாம் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியினராகத்தான் இருக்கிறோம்.

மக்கள் எதிர்ப்பார்க்கும் வித்தியாசத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். சஜித் பிரேமதாஸவை கட்சியின் தலைவராக நியமிப்பதன் ஊடாகத்தான் வளர்ச்சிப் பாதையை நோக்கிப் பயணிக்க முடியும்.

இது இடம்பெறாவிட்டால் மாற்று தீர்மானமொன்றுக்குச் செல்ல முடியாது என்றும் கிடையாது. ஆனால், நாம் அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கவில்லை. கட்சியை பிளவுப்படுத்த வேண்டும் என்ற நோக்கம் யாருக்கும் கிடையாது – என்றார். (ஐ)

## காட்டு யானைகள் அட்டகாசம் விவசாயிகள் பெரும் பாதிப்பு!

வவுனியா, டிசெ. 05

வவுனியா செட்டிகுளத்தில், காட்டு யானைகள் விவசாய நிலங்களை சேதமாக்கியுள்ளமையால், தங்களின் வாழ் வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசா யிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வவுனியா செட்டிகுளத்தில், தினமும் விவசாய நிலங்களுக்குள் நுழையும் யானைகளால் தங்களின் விவசாய நிலங் கள் அழிவடைந்து வருகின்றன எனவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் விவசாயிகள் கூறியுள்ளனர்.

இதனால், சுமார் 60 ஏக்கர் வரையி லான உழுந்து பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ளதாகக் கூறப்பட்டது.

அரசடிகுளம், மதகு வைத்த குளம், பாவக்குளம், பெரிய புளியாலங்குளம் ஆகிய கிராம விவசாயிகளே காட்டு யானைகளினால் அதிகளவில் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

நேற்று முன் தினம் இரவும் யானைகள் விவசாய நிலங்கள் மற்றும் குடிமனை களுக்குள் புகுந்தமையால் உழுந்துப் பயிர்ச் செய்கைகள் மற்றும் நெல் பயிர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## யாழ்.பல்கலை பட்டமளிப்பு வெள்ளிக்கிழமை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 05

யாழ். பல்கலைக்கழக 34 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகத்தின் வேந்தர் பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தலைமையில் 11 அமர்வுகளாக இந்தப் பொதுப் பட்டமளிப்பு விழா கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

இந்த விழாவில் கலைப்பீடம், விஞ்ஞான பீடம், முகாமைத்துவக் கற்கைகள் , வணிகபீடம், விவசாய பீடம், மற்றும் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 1369 உள்வாரிப் பட்டதாரிகளுக்கும், உயர் பட்டப் படிப்புகள் பீடத்தைச் சேர்ந்த 64 பட்ட பின்படிப்பு பட்டதாரிகளுக்கும், 31 டிப்ளோமாதாரிகளுக்கும் பட்டங்களும், தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதுடன், 348 வெளிவாரிப்பட்டதாரிகளின் பெயர்கள் வாசிக்கப்பட்டு பட்டங்கள் உறுதிப்படுத்தப்படவுமுள்ளன என்று யாழ். பல்கலைக்கழகத் தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க. கந்தசாமி தெரிவித்துள்ளார்.

பட்டமளிப்பு விழா தொடர்பாக நேற்றுக் காலை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விவரங்களை வெளியிட்டார். (ஜ – 07)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.12.2019 இல் வெளியிடப்பெற்றது.